# சுடரொளி
# CHUDEROLI

இருமாத மொருமுறை

## உலகெலாம் தமிழ் பரப்பிய தனிநாயகம் அடிகளார்



## சிறப்பு மலர்
## 1999

£2.00

# NAG & CO
# SOLICITORS
## Administrators of Oaths

High Quality Services

*We enjoy high rate of success especially in Immigration, Employment, Welfare benefit dispute, Housing & debt.*

Provided by Experts

Languages spoken
Tamil, Sinhalese, English, French, Spanish, Hindi, Punjabi, Gujarati, Kongani & Pattuwa

In

- Immigration
- Debt * Employment
- Housing * Family Law
- Crime * Conveyancing
- Traffic Offences
- Welfare * E.C.Laws

We are centrally Located in London

Nearest Underground Stations:
Oval (Northern Line),
Brixton (Victoria Line)

We have now been successful at the preliminary audit for Legal Aid Franchise

Unit 3, Halles House
Myattsfield South, Overton Road, London SW19 7JN
Tel: 0171 – 737 1211 Fax: 0171 – 737 0809

# சுடரொளி

## CHUDEROLI

சுடர் 1 ஒளி 1

**உலகத்துக்கே தமிழின் இனிமை,**
**தொன்மை, பாரம்பரியம், சிறப்பு**
**ஆகியவைகளைப் பரப்பிய பெருமைக்குரிய**
**தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் சிறப்பிதழ்**


- கலங்கரை விளக்கமாக ஒளிரட்டும் சுடரொளி
- ஆசிரியர் பக்கம்
- கவிதை வாழ்த்து
- உலகெங்கும் தமிழ் முழக்கம் செய்த தனிநாயகம் அடிகளார்
- தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பணிகள்
- அருட்திரு தனிநாயக அடிகளாரும் ஆறுமுக நாவலர் அடிகளாரும்
- பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்
- பைந்தமிழ் ஓங்கிடப் "பாங்காக்கை" நோக்கிப் பயணம் செய்வோம்
- உலகளாவிய தொன்மைத்தமிழ்
- திருக்குறள் கல்லூரிக்கு நிதி வழங்கி ஆதரவு நல்குங்கள்
- 2000 ஆம் ஆண்டு உலகத் தமிழ்க் கவிதைத் தேர்வு
- தந்தை செல்வா
- தமிழர் மறுமலர்ச்சியின் தந்தை
- பண்பாட்டுப் பாதுகாவலன் - நல்லை நகர் நாவலர்
- தமிழ்த்தூது தவத் திரு தனிநாயகம்


**கௌரவ ஆசிரியர்:**
சி.சரவணபவன்(சிற்பி)M.A
**ஆசிரியர்:**
ஐ.தி.சம்பந்தன்
**ஆசிரியர் குழு ஆலோசகர்கள்:**
பொன் பாலசுந்தரம்
கவிஞர் செ.நாகேந்திரன்
ம.மனோகரன்
திருமதி அன்னலெட்சுமி ஜெயபாபு
**விளம்பரம் விநியோகம்:**
அ.ஜெயதீசன்
**நிருவாகம்:**
திருமதி செல்வதி சம்பந்தன் BA(Hons.)
**வடிவமைப்பு:**
திரு ஆ.ஞானேந்திரன்
**Type setting**
திருமதி சரோஜா இலட்சுமணன்

**Annual Subscription for 6 issues**

| | |
|---|---|
| UK | £10.00 |
| Europe/India/Sri-Lanka | £15.00 |
| All other countries | £20.00 |

**வெளியீடு**
Chuderoli Publication Society
Flat-1, 198 Neville Road,
London E7 9QN. UK
**Tel : 0181 552 6992**
**Mobile : 0956 65 78 52**

# கலங்கரை விளக்கமாக ஒளிரட்டும் சுடரொளி

## உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலகத் தலைவர் வீரப்பனார் வாழ்த்து.

1999 ஆவணி முதலாக இரு மாத ஏடாகச் சுடரொளி இலண்டனில் வெளி வருவது பாராட்டத் தக்க பெரும்பணி. 17 ஆண்டாக ஈழத்திலும், புலம் பெயர்ந்து வந்து இயங்கும், ஈழத்தமிழ்ப்பண்பாட்டுடன் பாடுபடும் இயக்கம் சுடரொளி வெளியீட்டுக் கழகம். இது தமிழியக்கக் கலாச்சாரமாகப் பேரொளி பரப்பும் என எண்ணுகிறோம்; வாழ்த்துகிறோம்.

இக்கழகத்தின் அடிப்படைக் கொள்கையான தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடுவது மிகப் பெரிய தமிழியக்கப் பணியாகும். ஈழத்தமிழர் வரலாற்றுக்கு மட்டுமல்ல. தமிழீழப் பேராண்மையை விளக்கும் நூல்களையும் வெளியிட்டிருப்பது மாண்புள்ள தொண்டு. தமிழினத்துக்காகப் பாடாற்றும் எழுத்தாளர்களைப் போற்றுவதும் நம் பண்பாடு.

இன்று நூற்றுக்கணக்கான பேரூர்கள் நிரம்பிய பல நாடுகளில் இவ்வாறான இலக்கியங்களும் தமிழீழத் தாய்நாடு உருவாகப் பாடுபடுகின்றன.

உலகச் செம்மொழியும், முதல் தாய்மொழியுமான தமிழை வீட்டுக்கு வீடு பேசி மகிழ வேண்டும்! சுடரொளி எங்கும் படரட்டும்!

– மலேசியா –

---

### வருக தமிழர்பொற்காலம்

உலகக் கவிதைத் தேர்வு ஏன்?

உலக மக்கள் 2000 வருட ஆரம்பத்தை ஓர் புதிய யுகமாகக் கருதி பல புதிய திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏற்பாடு மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வோர் நாடும் ஒவ்வோர் இனத்தவரும் அவர்களது நிலைப்பாடுகளுக்கமைய புதிய சகாப்தத்தை உருவாக்க திட்டமிட்டு செயற்படுகின்றனர். 21 ஆம் நூற்றாண்டில் புதியதோர் சமுதாய அமைப்பு உருவாக முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து துறைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

இந்த புதிய உலக சமுதாய அமைப்பில் உலகமெல்லாம் பரந்து வாழும் 8 கோடி தமிழர்கள் வாழ்வும் வளமும் எப்படி அமையப் போகிறது?

உலகத்தோடு ஒட்ட ஒழுக வாழ்தல் எமக்கு இன்று அவசியமாகிறது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதற்கிணங்க வாழ்கின்றோம்.

எனவே 21ம் நூற்றாண்டில் எட்டுக்கோடி தமிழர்களின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும், அவர்களுக்கு அமைய இருக்கும் சுதந்திர தமிழகம், அதில் அவர்கள் வாழ்க்கை நெறி, தமிழ் மொழி தமிழ்க்கலாச்சாரம் எத்தகைய புதுமை காணவுள்ளது, தமிழர் பொருளாதார நிலை, ஏற்ற சிந்தனைகளை ஓர் கவிஞர் பார்வையில் நோக்குவதே.

**'வருக ஓர் பொற்காலம்'**

பாரத விடுதலையையும், மக்கள் வாழ்க்கையையும் பாரதியார் எப்படி முன்னோடியாக பார்வையிட்டாரோ, அதே போன்று உலகெல்லாம் பரந்து வாழும் கவித்திறன் மிக்க தங்கள் நோக்கில் தீர்க்க தரிசனம் கூறட்டும். கவிதை படைப்பவர்களுக்கு காத்திரமான பரிசில்கள் காத்திருக்கின்றன. விபரங்களுக்கு கவிதை அறிவித்தலைப் பக்கம் 26ல் பார்வையிடுக.

# எமது தமிழ்ச்சுடர்

வணக்கம்!

**தமிழ்** பூந்தோப்பில் ஒரு புதுமலர் மலர்கிறது. அதுதான் - "**சுடரொளி**"

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சுடரொளி நறுமணம் வீசும் மலராக மலர்ந்து வர வேண்டுமென்பதே எமது ஆசை.

தமிழ் இன்று உலகளாவிய மொழியாக பரந்து படர்ந்து வருகிறது. உரிய மண்ணை விட உறவு கொண்டாடும் மண்ணில் உன்னதமடைந்து வருவதைக் காண்கிறோம். பெருமை தான். இது மறக்க-மறைக்க முடியாத உண்மை.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முதல் மூத்த மொழி தமிழ்" என்று வாயாரப் பாராட்டலாம்.

கம்பனும், வள்ளுவனும், பாரதியும், ஆறுமுக நாவலரும், விபுலானந்தரும், தனிநாயக அடிகளாரும் தமிழ் வளர்த்தார்கள் என்று புகழ் பாடலாம்.

இப்படியே மனதை நிரப்பிக் கொண்டிருப்பது எதிர்காலத்தில் வியர்த்தமாகி விடும். பழம் பெரும் பொக்கிஷங்களையெல்லாம் பிரதிகளாக்கியும், தமிழ்ச்செல்வம் தந்த பெரியார்களின் படைப்புகளையெல்லாம் மக்களுக்கு சுலபமாக கிடைக்கச் செய்ய வேண்டும்.

காப்பியங்கள், கதைகள், இலக்கியப் படைப்புக்கள், கவிதைகள், கல்வெட்டுக்களாக - இன்னும் எவையெல்லாம் எமது தமிழுக்கு பெருமை தருவதாக உள்ளனவோ அவைகள் எல்லாம் புதுயுகத்தில் பொலிவு பெற வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் தமிழ் உலகில் உன்னத நிலையை அடையும்.

தமிழ் ஆர்வம் குன்றி வருவதாக தீர்ப்புக் கூறி விட முடியாது. நாம் எதிர்பார்க்காத நாடுகளிலிருந்து தமிழ் தென்றல் வீச ஆரம்பித்திருக்கிறது.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் எம்மில் எவராவது கனடாவிலோ, அமெரிக்காவிலோ, ஜெர்மனியிலோ, பிரான்ஸிலோ தமிழ் முழங்கும் என்று நினைத்தது கிடையாது. ஆனால் இன்றோ "யாதும் ஊரே யாவரும் கேளிர்- தமிழைக் கேளீர்" என்றாகி விட்டது. இந்த மறுமலர்ச்சியில் பங்கு கொண்டுள்ள தமிழ்த்தாயின் மக்களுக்கு சுடரொளியின் பாராட்டுக்கள் - நன்றிகள்.

வசிக்குமிடம் எதுவாக இருந்தாலும், எம் கடன் தமிழ்ப் பணி செய்து கிடப்பதே என்ற வானுயர்ந்த எண்ணம் தமிழ் மக்கள் மத்தியில் - மனதில் குடி கொண்டிருப்பதே இதற்கு மூலகாரணம். தமிழுக்கு 21-ம் நூற்றாண்டில் - அதாவது புதிய யுகத்தில் நல்ல எதிர்காலம் இருக்குமென்பதற்கு இது ஒரு முன்னோடியாகும்.

தமிழுக்கு இப்படியெல்லாம் இன்றைய கால கட்டத்தில் ஈழம் வாழ் தமிழ் மக்கள் ஆற்றி வரும் தொண்டு அளப்பரியது. கஷ்டம், நஷ்டம், இழப்புக்களை எல்லாம் சகித்து தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உழைப்பது நெஞ்சைத் தொடுகிறது. அவர்களின் ஆசைத் தமிழை உலகளாவிய மொழியாக மலரச் செய்யும் என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை!

இந்தச் சிந்தனை நெஞ்சோடு இருக்கும் போது நாம் எதிர்பாராத நாடொன்றில் நடைபெறவுள்ள தமிழ் மாநாடொன்று பற்றிய விபரம் கிடைத்திருக்கிறது. வாசக நேயர்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் அது பெருமை தருவதாக இருக்கும். அதன் விபரங்களை சுடரொளி தனது பிறந்த நாள் இதழில் வெளியிடுவதில் பெருமையடைகிறது.

தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கில் நடைபெறும் பன்னாட்டுத் தமிழ் அறிவு மன்றத்தின் நான்காம் மாநாடே அதுவாகும்.

தாய்லாந்து பௌத்த நாடு. (இலங்கையும் பௌத்த நாடு தான்) பெரும் பான்மையினர் தாய் மக்கள். சிறு அளவில் சீனர்களும், இன்னும் சிறு அளவில் மலாயர்களும் வசிக்கிறார்கள். தமிழர்கள் மிக மிகக் குறைவு. 1824ம் ஆண்டில் ஆட்சி செய்த மன்னனுக்குப் பெயர் முதலாவது இராமர். தாய்லாந்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் இவர் தான்.

இது ஒருபுறமிருக்க திரவியம் சேர்க்க பர்மா, சுமித்திரா, ஜாவா(முன்னைய பெயர்கள்) சீயம் (தாய்லாந்து) போன்ற நாடுகளுக்குச் சென்ற தமிழர்களில் ஒரு சிலர் அந்த நாடுகளில் தங்கி விட்டார்கள். அப்படித் தங்கியவர்களில் சிலர் தான் இன்றும் நாங்கள் தமிழர்கள், தமிழ் தான் எமது மொழி என்று பெருமை பேசும் தாய்லாந்து தமிழர்கள்.

தமிழ்ப்பற்று மாறாமல் வாழ்ந்து வரும் தாய்லாந்து தமிழர்கள் இன்றைய காலகட்டத்தில் மற்ற நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு உதாரணமாக இருப்பது பெருமைக்குரியது. தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் இவர்களைப் போல தமிழ் மானம் மாறாமல் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

பாங்காக்கில் நடைபெறும் பன்னாட்டு தமிழ் உறவு மன்ற மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் டாக்டர் எம். எம். இலியாசு அவர்கள் உலகத் தமிழரே வருக! வருக! உங்களை இரு கரத்தால் மட்டுமல்ல, இதயத்தால் அழைக்கிறோம் என்று மிக உருக்கமாக அழைத்திருக்கிறார்.

இம்மாநாடு முற்றிலும் தமிழர்கள் பண்பாடு- மொழி -கல்வி கலாசாரம் பற்றியதாகவே அமையும். மதம் -சாதி அரசியல் நிலைகளுக்கு அப்பாற்பட்ட, தமிழ்மொழி உயர்வு, தமிழர்கள் முன்னேற்றம் கருதியே இம்மாநாடு அமையும். சுயலாபம் - புகழ் - பொருள் தேடல் அற்று முற்றிலும் தன்னலமில்லாத தமிழ் நலம்- பொது நல மனித நேயம் ஆழ்ந்த நிலையில் இம்மாநாடு அமையும். உலகத் தமிழ் -தமிழர் உயர்வே இம்மாநாட்டின் இலக்கு ஆகும் என்பது டாக்டர் இலியாசு அவர்களின் இதய ஒலி.

தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் பணி செய்யும் ஒவ்வொருவரையம் இலியாசு அவர்களின் இந்த அறைகூவல் விழிப்படையச் செய்யுமென்று எதிர்பார்க்கலாம்.

மேற்படி மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ டாக்டர். வா. மு. சேதுராமன் உலகளாவிய தமிழர்களை ஒன்றிணைப்பதன் அவசியத்தை வற்புறுத்தியிருப்பதுடன் 21 ம் நூற்றாண்டில் தமிழர்கள் ஏற்றம் பெறும் வழி வகைகளைக் காண்பதே மாநாட்டின் நோக்கம் என்று கூறி உசார்ப்படுத்தியிருப்பதும் நல்லதே.

இம்மாநாடு வெற்றிகரமாக நடந்து தமிழ் மொழிக்கும், தமிழர்களின் எதிர்கால சுபீட்சத்துக்கும் வழிவகுக்குமென்று நம்புகிறோம். மாநாடு வெற்றி பெற சுடரொளியின் வாழ்த்துக்கள்.

சிறு தமிழ்த்துளி, பெரும் தமிழ் வெள்ளமாகி, பின்னர் பரந்த தமிழ் சமுத்திரமாக மலர வேண்டுமென்பதே எமது ஆசை.

**பாரதியின் கனவை நனவாக்கிய தவத்திரு தனிநாயகம் அடிகளார்**

சைவத்தின் மகிமையை உலகிற்குத் தந்த பெருமைக்குரியவர் சோழப்பேரரசில் முதலமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணம்! 12 ம் திருமுறையெனப் போற்றப்படும் பெரும் பொக்கிஷம்.

தேன் சொட்டும் திருவாசகத்தை நாம் எல்லாம் படித்து பக்தி மார்க்கத்தைப் போற்ற வைத்தவர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகர்.

உலகே வியக்கும் வகையில் தமிழ் வாழ திருக்குறளைத் தந்தவர் வள்ளுவர்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வேண்டுமென்று ஆசைப்பட்டான் பாரதி.

ஆனால், உலகத்துக்கே தமிழின் இனிமை, தொன்மை, பாரம்பரியம், சிறப்பு ஆகியவைகளைப் பரப்பிய பெருமைக்குரியவர் தவத்திரு தனிநாயகம் அடிகள் தான் என்பதை மறுப்பதற்கில்லை.

தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவ வேண்டுமென்ற பாரதியின் ஆசைக் கனவை நனவாக்கிய பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளார் என்ற துறவி தான். உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து அதன் மூலம் தமிழின் இன்சுவையை படைத்து உலகளாவிய பாரதியின் கனவை நனவாக்கியவர் இவர்.

தமிழ் மொழியின் தொன்மையை தவத்திரு தனிநாயகம் அடிகளார் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகள் மூலம் அறியச் செய்தது தான் உலகளாவிய வகையில் தமிழர்கள் இன்று வாழ்வதற்கு வழிவகுத்தது என்பது இப்போது நிதர்சனமாகி விட்டது.

அடிகளாரின் தமிழ்த்திருப்பணி அன்று இல்லாதிருந்தால் இன்று தமிழ் உலகளாவியிருக்க முடியாது. இப்படி அவர் தமிழை வளர்த்த படியால் தான் தமிழர்கள் உலகளாவி வாழவும், பெருமை பெறவும் வாயிலானது என்பதும் ஒளிவு மறைவற்ற உண்மை.

அடிகளார் ஒரு மதப்பற்றுக்காக முதலில் துறவு பூண்டு பின்னர் தமிழ்ப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்தவர். இவ்வளவு பெருமைக்குரிய தவத்திரு தனிநாயகம் அடிகளாரை நாம் எங்கு வாழ்ந்தாலும், எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் நினைவு கூர வேண்டியது தமிழ் பேசும் நல்லுலகத்தின் கடமையாகும். தமிழ் நெஞ்சங்கள் இருக்கும் வரை அடிகளாரின் திருநாமம் அவர்களின் நினைவுகளில் இருக்கும்.

**பொன் பாலசுந்தரம்**
**ஆசிரியர் குழு**

குறிப்பு -
இம்மலர் பாங்காக் மகாநாட்டிற்கு முன்னதாகவே வெளியிடப்படவிருந்தது. ஆனால் சிலபல எதிர்பாராத காரணங்களால் அது முடியாமல் போய்விட்டது.

பாங்காக் மகாநாட்டின் மகிமையை உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்கள் பெருமையுடன் அறிய வேண்டுமென்பதற்காக மாற்றங்கள் செய்யாமல் அப்படியே பிரசுரித்துள்ளோம்.

இப்படியான மகாநாடுகள் இதர நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கும் தாம் வாழும் நாட்டில் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கும் என்பது எமது நம்பிக்கை.

வாழ்க தமிழ்.

## தொல் காப்பியத்தில் – நாம் தமிழர் –

“வட வெங்கடந் தென் குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுல கத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தோடு
முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந் தொகுத் தோனே”

# தவத்திரு தனிநாயகம் அடிகளாரை நினைவு கொள்வோமே!

கவிஞர் செ. நாகேந்திரன்

இயற்கை எழில் தாவும் ஈழத்திருமண்ணில்
இன்தமிழ் பேசும் நெடுந்தீவுக் கிராமத்தில்
உயர்திரு வஸ்திபாம்பிள்ளை தம்பதிகளுக்கு
உத்தம புத்திரனாய் அவதரித்தென்றும்
அயாரது ழைத்து அருந்தமிழ் ஆய்ந்து
அகிலப் புகழை அணையாது பெற்ற
செயற்திறன் மிக்க செந்தமிழ்க் காவலனை
சிறப்புடன் போற்றி நினைவு கொள்வோமே

சேவியர் எனும் பரம்பரைப் பெயருடன்
செவ்வனே செந்தமிழ் கற்றுத் தெளிந்து
மேவிய உணர்வால் மட்டற்ற வெறியுடன்
மென்தமிழுக்காய்த் தன்னைக் கொடுத்து
ஆவிபோல் அலைந்து உலகெங்குந் திரிந்து
அன்னைத் தமிழின் பெருமைகள் சொல்லி
ஏவிப் பலரைத்தமிழ் ஆய வைத்த
எண்ணற்கரியனை நினைவு கொள்வோமே

கிறிஸ்தவக் குருவாய் நியமனம் பெற்றும்
கருத்தோடு சைவத்திருமுறை கற்றுச்
செறிந்த தத்துவக் கருத்துக்கள் எடுத்து
செந்தமிழ்ச் செய்தியாய் உலகுக்கீந்து
குறிக்கோளுடன் பல கட்டுரை எழுதியும்
கன்னித்தமிழின் தொன்மையை விளக்கியும்
நெறிதவறாது வாழ்ந்துங் காட்டிய
நேசத்தமிழனை நினைவு கொள்வோமே

மனித நேயத்தை மனங்களிற் செலுத்தி
மக்களில் ஏற்றத் தாழ்வினை வெறுத்து
புனித கிறிஸ்தவக் கொள்கையின் சீலனாய்
பாரத மண்ணிலும் கிறிஸ்தவ உலகிலும்
இனிய தமிழுக்கே முதலிடங் கொடுத்து
இல்லந்துறந்த தவத்திரு வள்ளலாம்
தனிநாயகம் அடிகளைத் தரணித் தமிழர் நாம்
தன்மானத்துடன் நினைவு கொள்வோமே

சாதிமதபேதமற்ற சமத்துவம் தாங்கி
சீரிய தமிழால் ஒருகுடைப்பட்டு
ஓதியுணர்ந்த உலகமொழியனைத்திலும்
ஒப்பற்றதென்றும் தமிழென நிறுவி
மேதினியெங்கும் முழங்கித் திரிந்து
மேன்மைகொள் மாநாடு பற்பல நடாத்திய
நீதியின் செம்மலாம் நிகரற்ற தொண்டனை
நெஞ்சம் உருக நினைவு கொள்வோமே

ஓங்கிய அறிவுடன் மேடைகள் ஏறி
ஓயாது தமிழின் பெருமைகளியம்பி
ஆங்கில மக்களும் தமிழ்கற்கும் அளவுக்கு
அரும்பெருங்கருத்துக்கள் அகிலத்துக்கீந்து
தூங்கியதமிழரும் தமிழ் கற்க வைத்துத்
தன்மானங்காத்து வாழவுஞ் செய்து
நீங்காத இடத்தை வரலாற்றில் பெற்ற
நித்தியநாயகனை நினைவு கொள்வோமே

உள்ளத்தால் உயர்ந்து இதயத்தாற்பரந்து
உலகளாவிய சிந்தையில் வாழ்ந்து
தெள்ளுதமிழில் திறனாய்வு நடாத்தி
தமிழ் இலக்கண இலக்கியப் படைப்பினை
அள்ளியெடுத்து ஒப்பிட்டு உலக
அறிஞர்களுக்குத் தமிழின் உயர்வினை
வெள்ளிடைமலையாய் விளக்கிப் புகழ்பெற்ற
வித்தகச் செம்மலை நினைவு கொள்வோமே

சென்னிக்களஞ்சியமாய்ச் செந்தமிழ்க்காவலனாய்
செவ்விய படைப்புக்கள் பற்பல தந்து
தன்புகழ் தவிர்த்துத் தமிழ்ப் புகழ் பாடித்
தரணிவாழ் புலமைத் தமிழரைத் திரட்டி
பொன்னரிய உலகத் தமிழ் மாநாட்டினை
பன்முறை நடத்த முன்னின்றுழைத்த
கன்னித்தமிழின் கலங்கரை விளக்காம்
கருணையின் வடிவை நினைவு கொள்வோமே

பல்கலைக்கழக விரிவுரையாளராய்
பரிசுத்த குருவாய் பல்மொழி ஆசானாய்
வல்லமைவளம் பெற்ற பாவலராய் புரவலராய்
வத்திக் கானிலும் தமிழோசை தொடக்கிப்
பல்மொழி நூலையும் எடுத்தாய்வு செய்து
பற்பல நாட்டிலும் புகழினையீட்டி
நல்லதை யெண்ணி நன்மையே புரிந்த
நல்லதோர் ஞானியை நினைவு கொள்வோமே

அகராதி யமைக்கும் குழுவின் முதல்வராய்
அந்நியதேச மொழியிலும் பங்கேற்று
நிகரற்ற புகழைத் தன்னாட்டுக் களித்து
நிதிகள் திரட்டி யாழ் நூலகத்துக்குப்
பகரவே முடியாப் பல்லாயிரம் புத்தகம்
பாரெங்கிருந்துந் தேடிக் கொடுத்து
உகந்தன எல்லாம் உவகையுடன் செய்த
உத்தமனை நாம் நினைவு கொள்வோமே

சிந்தையில் தமிழர் எனும் உணர்வோடு
சித்தரவதைப் பட்டுச் செத்துமடிந்த
செந்தமிழ் பேசும் ஈழத்து மக்களின்
சோகங்களில் சென்று தானும் பங்கேற்று
தந்தை செல்வாவின் பணியினை மெச்சி
தந்தைக்கு அஞ்சலி யெனுந்நூல் இயற்றி
சொந்த பந்தமாய் இனத்தையே நேசித்த
சுதந்திரப் பிரியனை நினைவு கொள்வோமே

கலை கலாச்சார இதழ்களைத் தொடங்கி
கழகங்கள் நிறுவிக் கருத்துப் பரிமாறி
அலையலையாய் தமிழர் படுமின்னல் கண்டு
ஆத்திரங்கொண்டு அதனால் நலிந்து
நிலையாய் நமக்கோர் நாடுவரும் வரை
நமக்கேது விடிவென்று தீர்க்கமுரைத்துக்
குலையாத் தமிழ்ப் பற்றுடன் காற்றில்
கலந்த கனவானை நினைவு கொள்வோமே

**லண்டனில் தங்கநகைகளிற்கு ஓர் நவீனமாளிகை தங்கமாளிகை**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் வண்ணக் கனவுகளை நனவாக்க தங்கமாளிகை

உள்ளத்தைப் பிரமிக்கவைக்கும்
கைவண்ணமும் - நவீன காட்சியறையும்
கைகோர்த்து நிற்கும்

**நகைக்கொரு மாளிகை**

# தங்க மாளிகை

EAST LONDON, SOUTH EAST LONDON, ESSEX பகுதிவாழ்
மக்களின் வசதிகருதி LEWISHAM மில் திறக்கப்பட்டுள்ளது.

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும்.
காலை 10.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை திறந்திருக்கும்.

**மங்கையர்க்கொரு மாளிகை**

# தங்கமாளிகை

- ☐ மணமகளிற்குத் தேவையான உயர்ரகக் கூறைகள், மணமகனின் பட்டுவேட்டிகள் தங்கமாளிகைளில் பெற்றிடலாம்.
- ☐ திருமணப் பொன்னுருக்கலை முறைப்படி தங்கமாளிகையில் செய்திடலாம் அல்லது உங்கள் வீட்டிலேயே முறைப்படி செய்யும் சகல வசதிகள்.
- ☐ திருமண நகைகள் அனைத்தும் தங்கமாளிகையில் செய்துபெற்றிடும் போது Benz S class Limosine கார், மணமக்களிற்காக ஒழுங்கு செய்து தரப்படும்.
  (முன்கூட்டிய ஒழுங்குகள் அவசியம்)

உங்கள் எண்ணக்கொலுவிருக்கும் அத்தனை நகைக்கனவுகளும்
-இனி நிஜமாகும் நிலைகாண்பீர்!!

# தங்க மாளிகை

**'அமாலியா ஹவுஸ்'**

**276 Lewisham High Street, London SE13 6JZ**

**Tel : 0181 690 3686. Fax: 0181 690 4157**

# உலகெங்கும் தமிழ் முழக்கம் செய்த தனிநாயகம் அடிகளார்

அமுதன் அடிகள்

உலக நாடுகளில் தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் உரைகள் நிகழ்த்த வேண்டுமென்னும் எண்ணம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக இருந்த போது அடிகளாரின் உள்ளத்தில் முகிழ்ந்தது. தமிழ் இலக்கியத்தில் தோய்ந்திருந்த அடிகளார் அதனை உலகறியச் செய்யும் வகையில் உழைத்திட அப்போதே உறுதி பூண்டார்.

“நான் காண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று எம். ஏ. சிறப்புப் பட்டமும் எம். லிட். ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றேன். தமிழ்க் கலைகளில் மூழ்கியிருந்த நான் அந்தக் காலத்திலேயே நம் ஒப்பற்ற இலக்கியத்தைப் பற்றி உலகு அறிய வேண்டுமென ஒரு சிறிதாகுதல் உழைக்க உறுதி பூண்டேன்!” என்று அடிகளாரே தெரிவித்துள்ளார். இவ்வாறு உலக நாடுகளில் தமிழ்க் கலைத்தூது நிகழ்த்துவதற்கு அடிகளார் மிகவும் பொருத்தமானவரே. ஏனெனில், ஏற்கனவே ஐரோப்பாவில் பயின்றதால் அந்நாட்டு மக்களுடனும் மொழிகளுடனும் தொடர்புடையவர் அவர். ஆங்கிலம், இத்தாலியம், ஸ்பானிஷ், போர்த்துக்கேயம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மிக அருமையாக உரையாடவும் உரை நிகழ்த்தவும் வல்லவர் அடிகளார்.

## தூது நிகழ்த்திய நாடுகள்

1949-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரை ஈராண்டுகள் மலேயா, சீனா, சப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு, தென் அமெரிக்காவிலுள்ள பனாமா, எக்குவதோர், பெரு, சிலி, அர்ஜென்டினா, உருகுவே, பிரேசில், மெக்சிக்கோ, மேற்கிந்தியத்தீவுகளான ட்ரினிடாட், ஜமெய்க்கா, மார்த்தினீக், நடு ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா, இத்தாலி, பாலஸ்தீன், எகிப்து எனப் பல நாடுகளில் பயணம் செய்து தமிழ் மொழி, கலை, வரலாறு ஆகியவை பற்றி அடிகளார் உரையாற்றினார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் ஒரே ஆண்டில் இருநூற்றுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்தினார்.

## தாய்லாந்தில் தமிழ்

1954 - ஆம் ஆண்டில் தாய்லாந்து சென்றிருந்த அடிகளார் அங்கு தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடும் தமிழ்ப்பாக்கள் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவையிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதை அறிந்து வியப்புற்றார். அப்பாடல்கள் பின்வருமாறு:

“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்!”

“பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போது இப்போது ஆர் விமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவும் விளையாடி
ஏசம் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர்யாம் ஆரேலோர் எம்பாவாய்!

இப்பாடல்களை அடிகளார்க்குப் படித்துக் காட்டிய தாய்லாந்து நாட்டு அரச குரு தாய்லாந்து மொழியிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டிருந்த சில ஏடுகளிலிருந்தே எடுத்துப் படித்தார். ஒரு காலத்தில் இந்து சமயத்தைத் தழுவிப் பிற்காலத்தில் புத்த மதத்தை மேற்கொண்ட நிலையிலும் தாய்லாந்து மன்னர்கள் இந்து பிராமணரைப் போற்றி அவர்களின் சடங்குகளுக்கும் தமிழ் மொழிப் பாடல்களுக்கும் தம் அரண்மனையில் இடங்கொடுத்திருத்தல்

தமிழ்ப்பண்பாடும் செல்வாக்கும் அங்கு எத்துணை வேரூன்றியிருத்தல் வேண்டுமென்பதைக் காட்டுகின்றது என்பார் அடிகளார். தாய்லாந்து நாட்டுக்கும் தமிழகத்துக்கும் உள்ள தொடர்பினை முதன் முதலில் அறிந்து தெரிவித்தவர் தனிநாயகம் அடிகளாரே என பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறியுள்ளார். தாய்லாந்து மொழியில் இயற்றப்பெற்றுள்ள இராமாயாணத்தின் பெரும் பகுதி தமிழ்க் கம்ப இராமாயணத்தையே தழுவியாக்கப் பெற்றுள்ளது என்றும், கப்பல், தாயகம் என்னும் தமிழ்ச் சொற்கள் தாய்லாந்து மொழியில் வழக்கிலிருக்கின்றன என்றும், ஐ, அம், ஆய், என்னும் விகுதிகள் பெற்ற பல சொற்கள் தாய்லாந்து மொழியில் உள்ளன என்றும், அந்நாட்டு இராமாயாணத்தின் கதை மாந்தர் தமிழ்ப் பெயர் வழக்கினைத் தழுவிக் குபேரன், சுமந்தன், மாயன், சீவன் என்று "அன்" விகுதியுடன் பெயரிடப் பெற்றிருக்கின்றனர் என்றும் அடிகளார் கண்டார். தாய்லாந்து நாட்டு நாட்டியக் கலைகள் பெரும்பாலும் தமிழ்நாட்டுக்கலைகள் போன்றவை என்பதையும், தாய்லாந்தில் ஆக்கப்பெற்ற வெண்கலச் சிலைகளுக்கும் தொடர்பு இருப்பதையும் அடிகளார் கண்டு வியந்தார். பல்லவர், சோழர் காலச் சிற்ப முறைகளும் கட்டட அமைப்புகளும் தாய்லாந்தில் பரவியிருந்ததை அவர் கண்டார். மலாயாவையும் தாய்லாந்தையும் இணைக்கும் நீண்டு குறுகிய இடப்பரப்பில் அமைந்துள்ள "தாக்குவப்பா" என்னும் இடமே சிலப்பதிகாரம் காட்டும் "தக்கோலம்" என்பது அடிகளாரின் துணிபு. அம்மாவட்டத்திலேயே மணிக் கிராமத்தார் பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதும், அங்குள்ள இடப்பெயர்களும் சிவபெருமானின் பழைய சிலையும் தமிழ்க்கலைத் தொடர்பைக் காட்டுவதும் அடிகளாரின் இம்முடிவுக்கு அரணாயின.

> தமிழ் கத்தோலிக்க எழுத்தாளர்பேரவை, தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி வேளாங்கன்னிக் குரலொலி ஆசிரியருமாகிய அமுதன் அடிகளார், தனிநாயகம் அடிகளார் பற்றி வரலாற்று நூல் எழுதியுள்ளார்.

"தமிள்;" என்னும் தாய்லாந்து மொழிச் சொல்லுக்குக் "கொடிய, கறுத்த இந்தியன்" என்னும் பொருள் வழங்குவதைக் கண்டறிந்த அடிகளார் தாய்லாந்துக்கும் தமிழகத்துக்குமிடையே விளங்கிய தொடர்பு இதனால் உறுதிப்படுகிறது என்கிறார். அவ்வாறே 1955 ஆம் ஆண்டு கம்போதிய நாட்டுக்குச் சென்ற அடிகளார் அந்நாட்டுக்கும் தமிழகத்துக்குமிடையே விளங்கிய தொடர்புகளைக் கண்டார். அந்நாட்டுக் கிரேமர் மொழியில் கப்பல் "கப்பால்" எனவும், குதிரை "மா" எனவும் வழங்கப்பெறுவதையும் அவர் அறிந்தார். சைவமும் வைணவமும் கிரேமர் அரச குடும்பங்களில் பல காலமாகத் தழுவப்பெற்று வந்த சமயங்கள். பிற்காலத்தில் அங்கு புத்த சமயம் பரவியது எனினும் மன்னர் அரண்மனைகளில் பிராமணர்கள் வழிபாடு செய்து வந்தனர். "இன்றும் கம்போதியாவின் தலைநகராகிய ஃப்நோம் பென் நகரில் அப்பிராமணர்களின் வழித்தோன்றல்கள் சில வேளைகளில் வழிபாடு செய்து வருகின்றனர்" என்பதை அடிகளார் கண்டார்.

அந்நாட்டிலுள்ள அங்கோர்வாட், அங்கோர்தோம் ஆகிய இடங்களை ஆராய்ந்தபோது அங்கு பல இந்தியக் கலைக்கூறுகளை அடிகளார் கண்டார். மாளிகைச் சுவர்களில் பாரதம், இராமாயணம், விட்டுணு புராணம் முதலிய இந்தியக் காப்பியங்களிலுள்ள கதைகள் செதுக்கப்பட்டு இருந்ததையும் நகரைச் சுற்றியமைந்திருந்த அகழிகளையும் கண்டபோது, இந்தியாவுக்கும் கம்போதியாவுக்குமிடையே பண்டைக்காலத்தில் நிலவிய தொடர்பினை அடிகளார் உணர்ந்தார். அந்நாட்டு மன்னர் திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டு வந்ததையும் அவர் அறிந்தபோது பெருவியப்புக் கொண்டார். கோபுரங்களையும் கட்டட அமைப்புக்களையும் திருமாலின் உருவங்களையும் ஆராயும் போது மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய

இடங்களிலுள்ள கட்டட, சிற்பக்கலையைக் கிரேமர் அறிந்திருக்க வேண்டுமென்று அவர் துணிந்தார். அந்நாட்டு மன்னர்கள் கயவர்மன், இந்திரவர்மன், சூரியவர்மன் போன்ற "அன்" விகுதி பெற்ற பெயர்களைச் சூடும் வழக்கத்தை அறிந்த போது பல்லவ மன்னருடன் அவர்கள் தொடர்பு கொண்டிருந்திருத்தல் வேண்டும் என்று அவர் உறுதியாகக் கருதினார்.

தம் பன்னாட்டுப் பயணத்தின் போது அடிகளார் ஆற்றிய தமிழ்த் தொண்டினைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

அ) தமிழ் மொழி, இனம், இலக்கியம், நாகரிகம், வரலாறு ஆகியவை பற்றி எதுவுமே அறியாமல், இந்தியா என்றால் இந்தியாவின் வடபுலம் தான் என்று மேனாட்டார் நினைத்து வந்த நிலையைத் தம் விரிவுரைகள் மூலமும், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் மூலமும், பல அறிஞர்களோடு தொடர்பு கொண்டு விளக்கியமை மூலமும் அடிகளார் மாற்றியமைத்தார். **அடிகளாரின் தொண்டு காரணமாகவே உலக அரங்கில் தமிழ் இடம் பெற்றது என்பது மறுக்க வியலாத உண்மை.**

ஆ) இந்திய மொழிக் குடும்பங்களைப் பற்றியும், வரலாறு பற்றியும் அறிந்து ஆராய்ச்சி மேற்கொண்டிருந்த மேனாட்டு அறிஞர்கள் திராவிட மொழிக்குடும்பங்கள் பற்றியும் குறிப்பாகத் தமிழ் பற்றியும் அடிகளார் மூலம் அறிய வந்ததால், தமது தூண்டுதல் காரணமாகத் திராவிட மொழிகளைப் பற்றியும் குறிப்பாகத் தமிழைப் பற்றியும் ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ள வழி வகுத்தார்.

இ) தாய்லாந்து, கம்போதியா போன்ற கிழக்காசிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் குறிப்பாகத் தமிழகத்துக்கும் இடையே நிலவிய அரசியல், கலை, சமய, மொழி உறவுகளை முதன் முறையாக அறிந்து அதனைத் தமிழருக்கு வெளிப்படுத்தி, அதன் மூலம் பல அறிஞர்கள் அத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ள வழி கோலினார்.

ஈ) தமிழைப் பற்றிய ஆய்வுகள் தமிழில் மட்டும் நிகழ்வது தொடருமாயின் மேனாட்டார் தமிழைப் பற்றி அறிந்திடுதல் கடினம் என்பதால் தமிழைப் பற்றிய ஆய்வுகள் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

## உடன் விளைவு

தமது முதல் உலகத் தமிழ்த்தூதுப் பயணத்தின் போது அடிகளாரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த பேருண்மை பின்வருமாறு-

"உலகின் மிகப் பழைய மொழிகளுள் ஒன்றும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றுமாகிய தமிழ் மொழியோடு தொடர்புள்ள செய்திகளும் ஆய்வுக் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றால் மட்டுமே உலக அரங்கில் தமிழ் இடம் பெற இயலும்".

ஆகவே தம் பயணத்தை முடித்துக்கொண்டு தூத்துக்குடிக்குத் திரும்பிய அடிகளார், ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றினைத் தொடங்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார். அதற்கு Tamil Culture என்று பெயரிட்டார். அடிகளார் செயலாளராக இருந்து பணியாற்றிவந்த தமிழ் இலக்கியக் கழகமே இதழின் பதிப்பகமாக அமைந்தது.

## உலகெங்கும் தமிழ் முழக்கம்

விரைவில் Tamil Culture உலக அறிஞர்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைநகராகிய வாஷிங்டன் நகரிலுள்ள அமெரிக்கப் பாராளுமன்ற நூலகம், இதழைத் தங்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்குமாறு அடிகளாருக்கு வேண்டுகோள் விடுத்தது. அவ்வாறே நியுயார்க் பொது நூலகமும் உரோமையில் உள்ள பண்பாட்டுப் பரப்பு மையமும் வேண்டுகோள் விடுத்தன. (அன்றைய) செக்கோஸ்லாவாக்கிய நாட்டு ப்ராக் நகரிலுள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் அறிஞர் கமில் சுவலபில், ப்ரான்சு நாட்டுப் பாரீஸ் நகரிலுள்ள பிரான்சுக் கல்லூரியைச் சார்ந்த ழான்ஃபீலியோசா போன்றார் அடிகளாருடன் தொடர்பு கொண்டனர்.

# தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பணிகள்.....

1940-45 துணைத் தலைமையாசிரியர், புனித தெரசாள் உயர்நிலைப்பள்ளி, வடக்கன்குளம் (தமிழ்நாடு)

1948- தமிழ் இலக்கியக் கழகத்தை நிறுவுதல்

1949-50 உலகத் தமிழ்த் தூதுப் பயணம்

1952- இலங்கையில் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கத்தை நிறுவுதல்-தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) இதழைத் தொடங்குதல்

1952-61 இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறையில் விரிவுரையாளர்

1954- சென்னையில் தமிழ் பண்பாட்டுக் கழகத்தை நிறுவுதல்

1961- அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, செர்மனி, இத்தாலி, ஸ்காண்டிநேவியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் மூத்தோர் கல்வி பற்றிய ஆய்வுப் பயணம்.

1961- சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

1961-69 மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைத் தலைவர், பேராசிரியர்

1964 - ஜெர்மனி நாட்டில் விரிவுரைகள் ஆற்றுவதற்காக மேற்கொண்ட பயணம்
உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவுதல்- அம் மன்றத்தில் பொதுச் செயலாளர்

1965- அக்டோபர்-டிசம்பர் மலாயாப் பல்கலைக் கழகத்தின் கலைப் புலத்தின் தற்காலிகத் தலைவர்

1966-67 பல்கலைக் கழகக் கலைப்புலத் தலைவர்

1966- முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் அமைப்புக் குழுத் துணைத் தலைவர், மாநாட்டு இணைத் தலைவர்

1969- மலாயாப் பல்கலைக் கழகப் பணியினின்று ஓய்வு பெறுதல்

1970- பாரீஸ் நகரில் பிரான்சுக் கல்லூரியில் இணைப் பேராசிரியர்

1971- நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் (Visiting Professor)

இன்னும் இலங்கை அரசின் சாகித்திய மண்டலத்தின் உறுப்பினராக 1961 வரையிலும், சென்னை மாநில அரசின் தமிழ் வளர்ச்சிக் கழக உறுப்பினராக 1963 வரையிலும், சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில-தமிழ் அகராதிக் குழுவின் உறுப்பினராக 1963 வரையிலும், சென்னை அரசின் குழந்தைகள் மூத்தோர் பாடநூல் தலைவராக 1964 வரையிலும் அடிகளார் பணியாற்றி யிருக்கின்றார்.

மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணி புரிந்த போது-

1961--63 இசுலாமியக் கல்விக் குழுவில் உறுப்பினர்

1961--64 மலாயாப் பல்கலைக் கழகக் கல்வித் துறைப்பாடக்குழுவில் கலைப்புல உறுப்பினர், கல்வித்துறையின் கலைக்குழு உறுப்பினர்

1961--66 பல்கலைக் கழகப் பேராசிரியர் பெருமன்ற உறுப்பினர்

1961--66 இலக்கிய ஆணைக்குழு உறுப்பினர்

1961--66 பல்கலைக் கழக மாணவர் நல ஆணையத்தில் உறுப்பினர்

1961--69 மலாயா நாட்டு உயர்நிலை, கேம்பிரிட்ஜ் மேனிலை வகுப்புக்களின் தமிழ்த் தேர்வாளர்

1963--64 உளவியல், மானிடவியல், சமூகவியல், மெய்யியல், அரசியல், ஆட்சியியல், மொழியியல் துறைகளில் பாடத் திட்டக் குழு உறுப்பினர்

1964-67 கீழைத் தேய அறிஞர்களின் மன்றத்தில் மலேசியக் கிளைத் துணைத் தலைவர்.

என மேலும் பல பொறுப்புக்களை அடிகளார் ஏற்றுச் சிறப்பாகப் பணி புரிந்தார்.

1952--1966 ஆண்டுகளில் Tamil Culture இதழின் முதன்மை ஆசிரியராகவும் 1969 - 70 ஆண்டுகளில் Journal of Tamil Studies இதழின் முதன்மை ஆசிரியராகவும் அடிகளார் அளப்பரிய தொண்டு புரிந்தார்.

மேலும், பல ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு பற்றிய சிறப்புரைகளை அவர் நிகழ்த்தியுள்ளார். இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, மலேசியா, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடு எனப் பல நாடுகளின் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் உரை நிகழ்த்தியுள்ள அடிகளாரின் சிறப்புக் கட்டுரைகளை உலக நாடுகளின் பல இதழ்கள் வெளியிட்டு மகிழ்ந்தன.

1973 - ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற கீழைத்தேய அறிஞர்களின் உலக மாநாட்டில் அடிகளார் கலந்து கொண்டார்.

1974 - ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டை நடத்துவதில் இலங்கைத் தமிழ் அறிஞர்களுக்கு வலக் கரமாகவும், மாநாட்டு அமைப்புக்குழுவில் இணைச் செயலராகவும் விளங்கியதோடு, மாநாட்டில் தொடக்கவுரையும் ஆற்றினார் அடிகளார்.

யாழ்ப்பாணம் மாநாட்டின் போது நடைபெற்ற வன்செயல்களால் அடிகளார் தாங்கொண்ணாத் துயருற்றார். அதன்பின் பொது நிகழ்ச்சிகளில் அடிகளார் மிகுதியாகக் கலந்து கொள்ளவில்லை.

1979 - ஆம் ஆண்டு ஜூலை முதல் பண்டத்தரிப்பு என்னுமிடத்திலுள்ள தியான இல்லத்தில் அடிகளார் வாழ்ந்து வந்தார். அவரது உடல்நலம் குன்றியிருந்ததே இதற்குக் காரணமாகலாம். அவ்வில்லத்துக்குப் பொறுப்பேற்றிருந்த திருக்குடும்பக் கன்னியர்கள் அடிகளாரை நன்கு ஓம்பி வந்தனர். கன்னியர்க்கு ஆங்கிலமும், அப்பகுதியிலுள்ள இளம் பெண்களுக்குத் தமிழ் இலக்கியமும் கற்றுக் கொடுத்தார் அவர்.

1979 - ஆம் ஆண்டு டிசம்பரில் அடிகளாரின் உடல் நலம் தேறியது. அவ்வமயம் இலங்கையில் அவசரகாலச் சட்டத்தின் காரணமாகத் தமிழ் மக்கள் அனுபவித்த துயரத்தைக் கண்டு மனம் நொந்த அடிகளார் பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து தம் கருத்துக்களை வெளியிட விரும்பினார்.

தாம் விரும்பியவாறே 10. 01. 1980 அன்று யாழ்ப்பாணம் நகர மன்றத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அடிகளார் உரை நிகழ்த்தினார். யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்ட நிகழ்ச்சியின் நினைவு நாள் அது.

அதே ஆண்டு ஏப்ரல் 26-ஆம் நாளன்று "தந்தைக்கு அஞ்சலி" என்னும் நூலைத் தந்தை செல்வா நினைவிடத் திறப்பு விழாவின் போது வெளியிட்டு உரையாற்றினார் அடிகளார். பின், 27, 28 ஆகிய இரு நாட்களிலும் தந்தை செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். முதல் நாள் "தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும் " என்னும் பொருள் பற்றித் தமிழிலும், மறுநாள் "தமிழ்த்துறை ஆய்வுகள் - இன்றுவரை, இனி" (Tamil Studies Retrospect and Prospect) என்னும் தலைப்பில் ஆங்கிலத்திலும் உரையாற்றினார். தமிழ்ச் சொற்பொழிவுக்குப் பேராசிரியர். சு. நேசையாவும், ஆங்கிலச் சொற்பொழிவுக்குப் பேராசிரியர். சு. வித்தியானந்தனும் (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணை வேந்தர்) தலைமையேற்றுச் சிறப்பித்தனர்.

# S.SATHA & Co

## SOLICITORS

- Conveyancing
- Employment
- Immigration
- Injunctions
- Criminal & Civil
- Housing
- Accident & Injury
- Matrimonial / Divorce
- Police Station Matters
- Legal Aid work undertaken
- Welfare Benefits

Principal: *S.Sathananthan*

Associate Solicitors: S.Aziz B.A.(Hons), K.Sabapathy LL.B(Hons), M.J.Manuel LL.B(Hons)
Trainee Solicitors: D.Farooq LL.M, S.A.Sayeed LL.B(Hons),
Legal Assistants: A.Khan LL.M, A.Rahman LL.B(Hons), P.Jochim, K.Attanda

Legal Aid

***378 High Street North***
***Manor Park***
***London E12 6PH***
***Tel: 0181 471 9484***
***Fax : 0181 471 9485***
***DX : 133012 Upton Park 2***
**Emergency Tel: No. 0956 288 671**

யாதும் ஊரே யாவரும் கேளிர்
"பெரிதே உலகம், பேணுநர் பலரே"
"எத்திசை செலினும் அத்திசைச் சோறே"

என்ற புறநானூறு கூறும் பரந்த உலக மனப்பான்மையை
தமதாக்கிக் கொண்டவர் தனிநாயகம் அடிகளார்.

# YOGA RAJA & CO

## SOLICITORS

COMMISSIONERS FOR OATHS

- Immigration
- Family Matters
- Criminal & Civil Litigation
- Employment, Landlord & Tenant Law
- Police Station Representation

**125B Mitcham Road**
**Tooting, London SW17 9PE**
**Tel: 0181 672 1811**
**Fax: 0181 682 4240**

**Branch**

**41 Lee High Road**
**Lewisham, London SE13 5WS**
**Tel: 0181 852 9962**
**Fax: 0181 852 0245**

# CHAMBERS OF MR S. J. JOSEPH

**2 MIDDLE TEMPLE LANE 3 RD FLOOR**

**Temple, London EC4Y 9AA**

**Tel: 0171 583 4540 Fax 0171 583 9178**

**Fax: 0072 London Chancery Lane**

**Email:2.mtl@ukonline.co.uk**

**YOU HAVE THE RIGHT TO SELECT YOUR COUNSELS!**
**WHY DON'T YOU INSTRUCT YOUR SOLICITORS TO RETAIN ONE OF US.**

**WE HAVE EXPERTS IN**

**CRIMINAL LAW**
**IMMIGRATION , REFUGEE AND WELFARE**
**EMPLOYMENT**
**COMMERCIAL LAW**
**LICENCING**
**FAMILY AND CHILDREN**
**HOUSING, LANDLORD AND TENANTS**
**ARBITRATIONS**
**PERSONAL INJURIES**

**BARRISTERS IN THE CHAMBERS**

S.J.Joseph
S. A. Khan
Miss Maria Jabati
Jon Trussier
G. Franco
Derek Adams
Jon Reynolds
Miss Shamim Sher
Miss Mehtab Malhotra
Miss Jayasheree Bezzam
Rafaquat Hussain

**Contact: Bala Sahadevan - Clerk to the Chambers**

# அருட்திரு தனிநாயக அடிகளாரும் ஆறுமுக நாவலர் அடிகளாரும்

## சேவை ஆய்வுரைக் கண்ணோட்டம்

—— க.வெற்றிவேல் ——

**பின்வரும் தலைப்புகளில்**

| | | |
|---|---|---|
| அடிகளாரவர்கள் | V | நாவலரவர்கள் |
| நெடுந்தீவுமண் | V | நல்லூர் ஆதீனம் |
| கிறிஸ்தவமும் தமிழும் | V | சைவமும் தமிழும் |
| சுதந்திரத்தின் பின்னர் | V | அன்னிய ஆதிக்கத்தில் |
| சைவத்தமிழ் ஆராய்ச்சி | V | சைவத் தமிழ் சேவை |

செந்தமிழும் சைவமும் சேர்ந்தே புகழ் பரப்பி இயற்கை வளம் நிறைந்த ஈழவள நாட்டிலே நெடுந்தீவு மண்ணிலே வாழ்ந்திருந்த ஹென்றி ஸத்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை - செசில் ராசம்மா வஸ்தியான் பிள்ளை தம்பதிகளுக்கு மூத்த புதல்வராக 2. 8. 1913 ல் தனிநாயக அடிகளார் அவர்கள் அவதரித்தார். அடிகளுக்கு பெற்றோர் முதலில் வைத்த நாமம் சேவியர் ஆகும்.

சிறு வயதிலே கல்வியிலே சிறந்து விளங்கிய அடிகளார் 1923 - 30ம் ஆண்டுகளில் யாழ்-புனித சம்பத்தரசியார் கல்லூரியிலும், 1931-34 வரையிலும் கொழும்பு புனித பெர்நாந்து குருத்துவக் கல்லூரியிலும், 1934-39 வரையும் ரோமாபுரியிலுள்ள ஊர்பன் பல்கலைக் கழகத்திலும், 1955-57ம் ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக்கழகத்திலும் இறையியலை நன்கு கற்றுத் தெளிந்த ஞானத்தையும் பெற்றார்.

உலக மொழியியல் சிறப்புக்களிலும், இலக்கண இலக்கிய வரலாறுகளிலும் ஆர்வமுடையவராய் விளங்கினார். அடிகளாரவர்கள் தனது தாயாரின் வேண்டுகோளுக்கிணங்கவே சமயப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டார்.

"புத்துயிர்ப்பு" என்னும் நூலைப் படித்ததினால் ஏற்பட்ட உணர்வினாலேயே தான் தன் வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணித்ததாகவும் விவரித்துள்ளார். ஓர் இனத்தின் சூழல் வாழ்க்கையிலும் பார்க்க, பல இன, மத, மொழி பேசும் மக்களுடன் வாழ்ந்ததினால் பலவிதமான அனுபவங்களையும், அறிவு, திறமை, ஆற்றல், மனப்பக்குவத்தையும், புத்துணர்வையும் தரும் என்பதை உணர்த்தியுள்ளார். ஊர்பன் பல்கலைக்கழகத்தில் இறையியல் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர் இந்தியாவிலே வடக்கன்குளம் பிரதேசத்திலே உள்ள கல்லூரியிலே ஆசிரியராக இருந்து கொண்டு பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயரிடம் நான்கு ஆண்டுகள் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்தார். 1945 ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் முதுகலை மாணவராகச் சேர்ந்து, பேராசிரியர் எம். இரத்தினசாமியிடமும், தமிழ்துறைத் தலைவராக விளங்கிய தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரிடமும்

கற்றுத் தேறினார். 1947 ல் முதுகலைமானிப்பட்டமும், 1949 ல் இலக்கிய முதுகலைமானிப்பட்டமும் பெற்றார்.

உலக மொழிகளிலே தமிழ் மொழியும் ஒரு தேசிய மொழியென்பதை உலகம் உணர வேண்டும் என்ற இலட்சிய நோக்கோடு, தமது சேவையை இறை ஊழியத்திற்கூடாக தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டதினால் கிறிஸ்தவ வாழ்வியலுக்கூடாக தாய்மொழியை உறுதிப்படுத்தும் உணர்வோடு தமது சேவைகளின் இறுதியிலே

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே"

என்று கூறி வந்தார். இனமத பேதங்களைக் கடந்து நிற்கும் மொழியுணர்வே இவரின் தாகமாய் இருந்தது.

இவ்வேளையிலே, தமிழ் மொழியின் வளர்ச்சியிலே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட பெரியார்களிலே, அருட்திரு ஆறுமுக நாவலர் இங்கு நினைவு கூரத் தக்கவர். வேறுபட்ட கால சூழ்நிலையிலே இவ்விரு பெருந்தகைகளும் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய சமூகத் தொண்டு மிகவும் கவனிக்கத் தக்கது.

பிரிட்டிஷ் ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் அனர்த்தங்கங்களினாலும் ஆதிக்க மோகத்தாலும் எமது தாய் மண்ணையும் தமது கலாச்சாரத்துக்குள்ளே புகுத்திவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிய காலம். ஆங்கிலம் தெரியாதவர்கள் அறிவிலிகள் என்று அவமானப்படுத்தப்பட்டு எம்மை முட்டாள்கள் என்று பட்டம் கட்டி விட எண்ணியிருந்த காலம். ஒரு தேசிய இனத்தை அவர்களின் கலை, கலாச்சாரம் என்பனவற்றில் இருந்து அன்னியப்படுத்தி அடக்கியாள நினைத்தவர்களையும் உணரும்படி எமது தமிழ்த் தேசீயத்தையும், கலாச்சார விழுமியங்களையும், கட்டியெழுப்பிய நாவலர் மகானின் பெருமைகளை மறந்து விட முடியாது. தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலே பாண்டித்தியம் பெற்ற இவரை தங்களுடைய சலுகைகளாலும், உதவிகளாலும் பணிய வைக்க முடியாது என்றுணர்ந்து புனிதமான ஆசிரியப்பணியூடாகத் தங்களின் சூழச்சிக்குட்படுத்தி வெல்ல நினைத்த போதும் ஏமாற்றமடைந்த பாதிரிமாரின் நினைவில் இன்றும் மறவாதவர். யாழ்-மானிப்பாயிலே பீற்றர் பேர்சிவல் பாதிரியார், தமது கல்லூரியிலே ஆசிரியராக அமர்த்தப்பட்ட நாவலர் பெருமானின் ஆங்கிலத் திறமையை உணர்ந்து அக்கல்லூரிக்கே தலைமை ஆசிரியராக நியமித்தார். இதனால் நாவலர் அப்பாதிரியார் மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார். இதை உணர்ந்த பாதிரியார் அவரைப் பல முறை கிறிஸ்தவராக்க முற்பட்டார். இவ்வேளையில் தனக்குக் கீழ் உள்ள மாணவர்கள் தம்மீது நம்பிக்கையிழக்க நேரிடலாமென மனம் வருந்தினார். பாதிரியாரின் செய்கைகளினால் தாம் திசை திருப்பப்படுகிறார் என்று தெரிந்து கொண்ட பின் தனது கடமையிலே கண்ணும் கருத்துமாயிருந்தார். அதே நேரம் பாதிரியாரின் சூழ்ச்சியை ஒருவாறு உணர்ந்து வேதனைப்பட்டார். ஆங்கில மொழியில் இருந்த விவிலிய வேதத்தை வெறுக்கவும் முடியாமல் தவிர்க்கவும் முடியாமல் சங்கடப்பட்ட போதும், அந்நூலை தமிழாக்கம் செய்து பாதிரியாரிடம் ஒப்படைத்தார். அதன் பின்னர் நாவலரைப் பயன்படுத்தி தமிழ் மக்களை, குறிப்பாக சைவர்களை, தம் வயப்படுத்தி விட முடியும் எனத் துணிந்த பாதிரியார், நாவலர் அவர்களை மத போதகராக மாறும்படி பல முறை வற்புறுத்தி வந்தார்கள். கடைசி வரையும் தம் மதத்தையும் மொழியையும் அத்துடன் தன்னை நம்பி இருந்த மாணவர்களின் எண்ணத்தையும், எதிர்கால நோக்கங்களையும், சிதைத்து விடக்கூடாது என்ற மனசங்கற்பத்தோடு தம்மைக் காப்பாற்றிக் கொண்டதோடு மட்டுமன்றி சமூகத்திற்காகவும் சைவத்திற்காகவும், தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். சைவனாகப் பிறந்து சைவத்திற்காகவும், சமூகத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும், தம்மை அர்ப்பணித்தவர். நம் தேசீயத்தைக் காத்து நின்ற பெருமகன். சேவை நோக்கில், மத நோக்கில், சமூக நோக்கில், தேசீய நோக்கில், சர்வ தேசிய நோக்கில், இந்த இரு பெரும் சாதனையாளர்களை ஒப்பு நோக்கி பார்க்கும் போது, அவர்கள் இல்லாவிடில் நம் நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கலாம்.

எந்த ஒரு மனிதனும் தன் தாய் மொழியினால் தான் தன் வரலாற்று விழுமியங்களை நன்கு உணர்ந்து தெளிவு பெற முடியும் என்று கண்டவர்கள் இவ்விருவரும். மக்களால் மட்டுமன்றி மதபோதகர்களாலும் மொழியை வளர்த்து விட முடியும் என்று சமூக நல வாழ்க்கையில் இவர்கள் இருவரும் ஒற்றுமையுடைய ஒரே கருத்துள்ளவர்களாகவே வாழ்ந்து காட்டியவர்கள். இதே சமயம் நாவலர் தம்மக்கள், தம் மதம், தம் சமூகம், தம் நாடு, என்ற ரீதியில் தான் செயல்பாடுகளை வழி நடத்திச் சென்றார். ஆனால் அடிகளார் இதே எண்ணங்களையும் செயற்பாடுகளையும் சர்வ தேச ரீதியில் செயல்பட்டு தமிழ் மொழியின் சிறப்பம்சங்கள், தேவார திருவாசக நெறிமுறைகள் என்பனவற்றை உலகின் முன் வைத்தவர். அடிகளாரின் பணி சமூகத்தோடும், மதத்தோடும் நின்று விடாமல் உலக மொழிகளிலே, உலக வாழ்க்கை தராதரத்திலே, எமது தேசீயம், சர்வதேசமெங்கும் பெருமைக்கும், வணக்கத்திற்கும் உரியவை என்பதை உணர்த்தி நிற்கின்றது.

அடிகளார் 1952லே இலங்கைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராக இருந்த காலத்திலே துாத்துக்குடியில் இலக்கிய மன்றத்தை நிறுவி தமிழ் பண்பாடு என்னும் முத்திங்கள் இதழை உருவாக்கி அதன் ஆசிரியராக இருந்து உலகமெலாம் 12 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் முழக்கம் செய்து வந்தமை யாரும் மறந்திருக்க முடியாது. இது தமிழாய்ந்து இலக்கண இலக்கியப் புகழ் காத்து நின்ற பெருமைக்குரியது.

உலக நாடுகளில் எவ்வகையான கல்வி முறைகள் கையாளப்படுகின்றன என்பதை ஆய்வு செய்து அடிகளார் வெளியிட்ட தமிழ் ஆய்வுக்கட்டுரை உலக நாடுகளின் கல்வி அமைப்பு முறைகளை தெளிவாக்கி உள்ளது என்பதைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பொன் கோதண்டராமனால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். உலகில் வாழும் ஒவ்வொரு தமிழரின் பெருமைகளையும், வாழ்க்கை முறைகளையும், மொழியின் அருமையையும் யாவரும் உணரும் வண்ணம் உலகறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தனித்து நின்று தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி, 21 நாடுகளிலிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டு 1966 ல் மலேசியாவிலே முதலாவது தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை நடத்தி வெற்றி கண்ட முதலாவது பெருமகன் அடிகளாராவார்கள். தமிழின் தொன்மையையும், பாரம்பரியத்தையும், மலாயா நாட்டின் தமிழர்கள் வாழ்ந்து வரும் சிறப்பையும் சுட்டிக்காட்டிய மலாயாப் பிரதமர் டாக்டர் துங்கு அப்துல் ரகுமான் அவர்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் பெருமை இன்று அருட்திரு தனிநாயக அடிகளாருக்கே உரியது என்று கௌரவித்துப் பேசினார். இவ்வாறே 2வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சென்னையிலே 1968லும், 3வது மகாநாடு பாரிஸ் தலைநகரிலும் கோலாகலமாக நடாத்தி, பிரான்ஸ் நாட்டின் மாபெரும் கல்லூரி ஒன்றின் பேராசிரியரும் அம்மாநாட்டைத் தலைமை வகித்து நடத்தி வைத்த பேரா.ஃபியோகாவால் அடிகளாரால் புகழ்ந்து பாராட்டப்பட்டார். 1974ல் எத்தனையோ தடங்கலின் மத்தியில் ஈழத்தமிழ் தலைநகரில் மகாநாட்டை தொடக்கி வைத்து உரையாற்றிய போது தமிழ்த்துறைகளின் எண்ணற்ற மார்க்கங்களின் ஆராய்ச்சிகளோடு தொடர்புடைய இலக்கிய இலக்கணங்களை மட்டுமன்றி, உலகப் பேரறிஞர்களின் ஒன்று கூடல்களையும், கருத்துப்பரிமாற்றங்களையும் தமிழினத்தின் கலாச்சார, வரலாற்று விழுமியங்களையும் பாதுகாத்து நிற்கும் பெருமைக்குரிய இக்கழகம் அதைத் தாங்கி நிற்கும் இம்மக்களுக்கே உரியது என்று தெளிவாகச் சுட்டிக்காட்டினார். இலங்கையிலே தமிழர் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையிலே அரசியல் நடைமுறையிலிருந்து வந்த சிக்கல்கள் நம் இனத்திற்கே பல இன்னல்களைத் தந்தன. பண்டாரநாயக்காவின் ஆட்சியிலே 1956ம் ஆண்டில் அரசியலமைப்புக்களாலும், சட்டவாக்கங்களாலும், தனிச்சிங்கள ஆட்சி மொழியின் கட்டாய அமுலாக்கங்களாலும், பிரச்சினைகள் வளர்ந்தன. சிங்களவரின் குடியேற்றங்களும் அடக்கு முறைகளும், தமிழின, மனித உரிமைகளுக்கு முரணானது என்பதைச் சுட்டிக்காட்டி நடாத்தப்பட்ட சாத்வீக போராட்டத்திலே அதுவும் தலைநகரின் கோல் பேஸ் மைதானத்திலே அடிகளார் கலந்து கொண்டு தமிழ் மக்களுக்காக, தமிழரின்

வாழ்வியலுரிமைகளுக்காக, தன் பங்களிப்பை செய்து தன் மனத் தூய்மையையும் தைரியத்தையும் வெளிப்படுத்தி நின்றார். ஆத்மீக உணர்வுடைய சமயத்துறவியாக இருந்த போதிலும், மனித உரிமைகளுக்கெதிராக நடாத்தப்படும் கொடுமைகளுக்கு நீதியின் குரல்வளைகளை நெரிக்க முடியாது என்பதை இலங்கை அரசுக்கு காட்டிய அடிகளார், பின்னர் மலேசியாவுக்குச் சென்று அங்கே "தமிழ் எங்கள் உயிர்" என்ற இயக்கத்தை ஆரம்பித்து, தமிழ் மக்கள் மத்தியில் நிதி திரட்டி 10,000 நூல்களை வாங்கி சேகரித்து யாழ் நூலகத்திற்கு வழங்கினார். நீதிக்காகக் குரலெழுப்பி தன் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் துணிந்தார். ஒரு இனத்தின் மதத்திற்காக நாவலர் பெருமானும் அவ்வினத்தின் பாரம்பரியத்திற்காகவும் மொழி-மொழி உரிமைக்காகவும் உழைத்த அடிகளாரையும் நாம் சந்திக்கின்றோம்.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தடிகள் அவர்கள் 32 மொழிகளைக் கற்றுத் தேறியவர் எனக் காண்கின்றோம். ஆனால் தனிநாயக அடிகளாராவர்கள் -18 மொழிகளிலே பாண்டித்தியம் பெற்ற இவர், தன் தாய் மொழியைத் தவிர எந்த மொழியையும் தன் வாழ்க்கை மொழியாக ஏற்றுக் கொள்ளவில்லை. சிதைந்து மறைந்து போனவற்றை விட ஆளுமைக்குரிய தமிழின் பெருமைகளைத் தாங்கி நிற்கும் ஐம்பெரும் காப்பியங்களை, அகநானூறு-புறநானூறு கொண்ட வீர காவியங்களைக் கற்றறிந்தும், திருப்திப்படாத இவர், இறைமையும், பெருமையும் புனிதமும் மிக்க சைவ சமயத்தத்துவங்களின் பெருமைகளை நான்மறைகளினூடாக உலகிற்குணர்த்திய தேவார முதல்வர்களான திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றோரால் அருளப்பட்ட தமிழ் வேதங்களான தேவார பாராயணங்களை ஆய்வு செய்து அவற்றினால் கிடைத்த தொன்மையையும், புதுமைகளையும், காலத்தால் முந்திய கற் பதிப்புக்களையும், தன் கட்டுரைகளிலும், எழுத்துக்களிலும் வெளியிட்டிருப்பது தமிழுக்கு மேலும் பெருமையைத் தருகின்றது. சமஸ்கிருதத்தை தமிழிலேயும், விவிலிய வேதத்தை தமிழிலேயும் மொழி பெயர்த்த நாவலர் பெருமானைப் போலல்லாது, கிறிஸ்தவனாக இருந்து கொண்டு தேவார பாராயணங்களை ஆய்வு செய்து தமிழை உலகறியச் செய்த தத்துவ ஞானியாக அடிகளாரை நாம் இங்கு தரிசிக்கின்றோம். ஒரு மனித இனம் - தரும நெறிகளைக் காத்து நிற்கின்ற பெருமைகளைத் தாங்கி நிற்கின்ற தமிழரினம் - என்பதை உலகிற்கு எடுத்துரைக்கும் பெருமையைக் காண்கின்றோம். ஒரு மனிதனின் ஆக்க ஊக்கத்தினால், மொழிப்பற்றினால், ஆத்மீகப்பலத்தினால், நீதியின் கோரிக்கைகளினால், நிலைமாறிப் போன இனத்தின் வாழ்வுக்காகத் தன்னை சந்தனமாக்கிக் கொண்ட அரசியல் ஞானியாய், தீர்க்கதரிசனவாதியாய், ஒப்பற்ற பெருமைக்குரியவராய் வாழ்கின்ற இவருக்கு வரலாறு மகுடம் சூட்டியுள்ளது.

இன்றைய புலம் பெயர்வுகளையும் வாழ்வியல் அனர்த்தங்களையும் தாங்கி அகதிகளாக வாழ்ந்த போதும் எம் இனம், எம்மொழி, எம் பண்பாடு, எம் கலாச்சாரம் நிலைத்து நிற்கக் காரணமாய் இருந்தவரை, காலத்தால் அழியாத புகழோடு நிற்பவரை, கணப்பொழுதும் மறவாமல் இன்று பாராட்டி நினைவு கூரும் பாக்கியத்தைப் பெற்ற நாடும் தீவும் பெருமைக்குரியவர்களாகின்றோம். தமிழ் வளர்த்த பெரியார்களிலே கம்பனாய், வள்ளுவனாய், பாரதியாய், காவிய நாயகர்களினால் நடத்த முடியாத அரிய சிறப்பைத் தமிழுக்கு அள்ளி வழங்கிய பெருமை நெடுந்தீவு மண்ணின் நேசக்குமரருக்கு நீங்காத புகழை ஈட்டித்தந்துள்ளது. "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத புகழ் என்று சங்கே முழங்கு" எனும் தத்துவ வரிகளில் முத்திரை பதித்த வித்தகத் தமிழன் தனிநாயக அடிகளின் உத்தமப் பணியை, அவரின் தீர்க்கதரிசனத்தை, சுதந்திர தாகத்தின் கோரிக்கையை, இன்று எமது மண்ணிலே எழுந்த போர்க்காலச் சூழலை எதிர்த்து, இனமத பேதமற்ற மொழியுரிமையுடைய சனநாயக வாழ்வுக்காய் தம்மை அர்ப்பணித்து நிற்கும் நம் இளைய தலைமுறையின் போராட்டத்தினால் மலரப் போகும் தமிழ் ஈழத்திலே நிதர்சனமாய் உணரும் காலம் வெகு தூரத்திலில்லை.

# பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

## அன்புடையீர் ! வணக்கம்,

1977 - ஆம் ஆண்டில் தொடங்கிய பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், உலகளாவிய நிலையில் தமிழ், தமிழர் ஏற்றம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் வழி செயலாக்கம் காணும் இயக்கம் என்பதைத் தமிழ் கூறுநல்லுலகம் நன்கறியும்.

நம் மன்றத்தின் முதல் மாநாடு 1985ஆம் ஆண்டு தமிழகமே போற்றிப் பாராட்டும் வகையில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது. இரண்டாம் மாநாடு தமிழ், தமீழர் என்று பேசவும் தமிழகம் அஞ்சிய சோதனைக்காலத்தில் மாற்றம் தரும் வகையில் சென்னையில் 1991 ஆம் ஆண்டு நடைபெற்றது. மூன்றாம் மாநாடு உலகளாவிய தமிழர்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அனைவருமே வியந்து பாராட்டும் வண்ணம் 1993-ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டின் தலைநகர் பெர்லினில் நடைபெற்று வரலாறு படைத்திருக்கிறது.

இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நாம் நம்மொழிக்கும், இனத்திற்கும் ஆற்ற வேண்டிய பணிகள் எவையென அறியவும், ஆராயவும் இம்மன்றத்தின் நான்காம் மாநாட்டினைத் தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக்கில் நடத்திட உள்ளோம்.

இம் மாநாட்டின் கருப்பொருளாக "21-ஆம் நூற்றாண்டினை நோக்கித் தமிழ், தமிழர்" என்ற பொதுத் தலைப்பினைத் தந்துள்ளோம்.

இம் மாநாட்டிற்கு வருகை தருமாறு உலகமெங்கிலும் வாழும் தமிழ்ப்பெருங்குடி மக்களை, அறிஞர்களை அழைக்கிறோம். பொதுக்கருப்பொருளின் தனித்தலைப்புகள்-

1 தொன்மைத் தமிழ் மொழி இலக்கியங்களில் அண்மைக்காலச் சிந்தனைகள்.

2 தமிழர்களின் சங்ககாலப் பண்பாட்டுக் கூறுகளே வளரும் உலகப் பண்பாட்டியல்களின் தொட்டில்.

3 கணிப்பொறி, - இணையம் - தொடர்பியல்கள் நிலையில் தமிழர்களின் இன்றைய முன்னேற்றம்.

4 எதிர்காலவியலில் தமிழ், தமிழர் சிந்தனைப் போக்கு.

5 தெற்காசியப் பண்பாட்டிற்குத் தமிழர்களின் பங்களிப்பு.

6 தமிழரல்லாத பிறநாட்டினரின், பிறமொழியினரின் தமிழ்த்தொண்டு.

7 வளரும் பொருளாதார மாற்றத்தில் தமிழ் வணிகர்களின் பங்களிப்பு.

8 21-ஆம் நூற்றாண்டுத் தொழில் மேம்பாட்டிற்குத் தமிழர்கள் ஆற்ற வேண்டிய பணிகள்.

9 இன்றையத் தமிழர் நெருக்கடிகளுக்கு எதிர்காலத் தீர்வுகள்.

10 இன்றைய இலக்கிய இலக்கணங்களின் மறுமலர்ச்சி காணும் புதுமைச் சிந்தனைகள்.

11 தமிழர்களின் பக்தி இலக்கியங்கள் கூறும் பக்தி நெறிகளில் மதவாத நெறிகடந்த மனித நேய வாழ்வியல் நெறிகளே முதன்மையா?

12 தமிழ்நாட்டில் தமிழ் முதன்மை - சிக்கல்களும் தீர்வுகளும்.

உறவு நிலையிலும், அறிவு நிலையிலும், ஆய்வுநிலையிலும், தமிழுக்கும், தமிழருக்கும் அடித்தளமாக விளங்கப் போகும் இம் மாநாட்டிற்குத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வரவேற்கிறோம்.

# பைந்தமிழ் ஓங்கிடப் "பாங்காக்கை" நோக்கிப் பயணம் செய்வோம்

பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் – சென்னை.

**தொன்று** தொட்ட தமிழர்கள் வரலாற்றினில் ஒரு மொழி வைத்து உலகாண்ட பெருமை தமிழுக்கே உண்டு. உலகப் பதிவேட்டில் அனைத்தையும் கடந்த மனித நேய மாண்புக்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழர் தனிப் பொதுமைச் சிந்தனையே தகைமை வீறு பெற்றதாகும். அடிநாள் தொட்ட வளர்ச்சியின் பல்வேறு நிலைகளைக் கடந்து 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் - தமிழர்க்கு ஓங்கிய புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் உருவாகி வளர்ந்துள்ளன. இந்த வளர்ச்சியின் அளப்பரிய ஆற்றல்களைத் தக்க வகையில் குவித்து 21 - ஆம் நூற்றாண்டை நோக்கித் தமிழ் தமிழர்கள் வீறு பெற வேண்டும் என்பதே - எம் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நான்காம் மாநாட்டின் நோக்கமாகும்.

பரந்து கிடக்கும் உலகளாவிய தமிழர்களின் ஒருமைப்பாட்டுக்காகவும், மேம்பாட்டுக்காகவும் 07.07.1977 ஆம் நாள் இம்மன்றம் வெற்றி பெற்றுள்ளதைத் தமிழ் கூறு - நல்லுலகம் நன்கு உணரும். உலகளாவிய தமிழ் அமைப்புக்கள் பல இருப்பினும், உலகத் தமிழர்கள் - தாயகம் வந்தால் அவர்களோடு உறவு கொண்டு - பாராட்டி - தமிழ் - தமிழர் உறவை நிலைநாட்டும் உயர்ந்த பணியைத் தொடர்ந்து செய்து இம்மன்றம் வெற்றி பெற்றுள்ளதைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு உணரும். உலகளாவிய அனைத்துத் தமிழர்களிடத்தும் எழுச்சி கொள்ளும் வகையில் நல்ல உணர்வுகளையும் - ஊக்கத்தினையும் இம்மன்றத்தின் செயல்பாடுகளின் வழி உருவாக்கம் காணும் தாக்கம் தமிழர்களிடம் இன்று உருவாகி உள்ளது. இம்மன்றம் கடந்த காலத்தில் மூன்று மாநாடுகளை நடத்தி, சோர்வுற்றுக் கிடந்த தமிழர்களுக்கு ஆர்வப் பெருக்கை ஏற்படுத்தும் அரிய - பெரிய பணிகளை ஆற்றியுள்ளது.

வையகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பல நெருக்கடி நிலைமைகளிலெல்லாம் தமிழரின் ஒருங்கிணைப்பை உருவாக்கும் சிறந்த சக்தியாக நடுவுநிலைமை தவறாமல், தனித்தன்மையோடு இம்மன்றம் விளங்கி வருகிறது. இந்த உன்னதமான தமிழ் - தமிழர் மேம்பாடு - மனிதநேய மாண்புகளின் வழித்நடத்தல், மற்றொரு நல்ல இலக்கையும், எழுச்சியையும் ஏற்படுத்துகிற முகத்தான், தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நான்காம் மாநாட்டினை நடத்துகிறோம். உயர் தனிச் செம்மொழியான தமிழ் காலத்தை வென்று காலத்திற்குத் தக்க கணினியாக ஆவன செய்வோம். இளைய தலைமுறைகளின் எண்ணக்கருத்துச் சிந்தனைகள் காலத்தின் வேகத்திற்கு உருவாகி வரும் மாற்றங்களின் தன்மைகளை ஒழுங்குபடுத்திச் சரியான விழுமிய வழிவகைகளில் வாகைசூடும் வழித்தடங்களை இம்மாநாடு ஏற்படுத்தும்.

உலகளாவிய தமிழர்கள் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, அறிவியல் துறைகளில் துறை போகிய - தலைசிறந்த ஆற்றல் படைத்தவர்களாக உள்ளனர். தமிழர்களாகிய இவர்களின் ஆற்றல்கள் தமிழுக்கும், தமிழருக்கும் பயன் தந்து, தமிழினம் மேம்படும் வகையிலான செயல் திட்டங்களைச் சிந்திக்கும் வாய்ப்புகளையும் இம்மாநாடு உருவாக்கும், பன்னாடுகளில் பரந்து வாழும் தமிழர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு - இனந்தளிர்களுக்கு தாய்மொழி தமிழைக் கற்றுக் கொடுக்கும் அவசியத்தையும் - ஆளுமையையும் வளர்க்கும் நிலைகளை அம்மாநாடு வலியுறுத்தும். பல்லின மக்களோடு பன்னாடுகளில் வாழும் சூழலில் பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு ஆளாகும் தமிழின மக்களின் துன்ப - துயரங்களில் பங்கேற்கும் திட்டங்களை இம்மாநாடு ஆராயும். தமிழருக்கு ஏற்பட்ட நெருக்கடிகளால் உலகெங்கும் சிதறுண்டு அகதிகளாகி வாழும் மக்களுக்கு ஆறுதல் தரும் வகையில், ஈழத்தில் அமைதியும் சமாதானமும் ஏற்படும் நிலைகளை இம்மாநாடு வரவேற்கும்.

மொத்தத்தில் உலகளாவிய தமிழர்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு துறையிலும் - தமிழர்கள் ஏற்றம் பெறும் வழிவகை காணச்

செய்யவே இம்மாநாட்டின் கருப்பொருளாக 21 ஆம் நூற்றாண்டை நோக்கித் தமிழ் - தமிழர் என்ற தலைப்புத் தந்துள்ளோம்.

இம்மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் - டாக்டர் இலியாசு பி.ஏ.எம்.பி.ஏ. அவர்கள் நல்ல வணிகர் மட்டுமல்ல. நல்ல சிந்தனையாளர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பெருநோக்கம் பெற்றவர். இன்னார் இனியர் என்னாது எல்லோர்க்கும் உதவும் பண்பினர். வல்ல அறவாணராகிய டாக்டர் இலியாசு அவர்கள் முற்றிலும் வேகத்தோடும், பொறுப்போடும், வலிவோடும், பொலிவோடும் இம்மாநாட்டினைச் சீரும் சிறப்புமாக நடத்துவார் என்பது உறுதி. இவருடன் இணைந்துள்ள வரவேற்புக் குழுவினர்கள் அனைவரும் நல்ல தமிழுணர்வு படைத்த பெருமக்கள். எனவே இம்மாநாடு சிறப்பாக அமையும்.

கலைஞர்க்குப் பவளவிழா

ஒப்பாரும், மிக்காருமில்லாத உன்னத ஆற்றல் படைத்த தமிழினத் தலைவர் மூதறிஞர் கலைஞர் அவர்களின் பவள விழாவும் இம்மாநாட்டில் ஒரு நிகழ்வாக நடைபெறும். உலக நல்லறிஞர்கள் - தலைவர்கள் - கலந்து கொள்வர். எது எப்படி இருப்பினும் இம்மாநாட்டின் வெற்றி உலகத் தமிழர்களாகிய உங்களின் கையில் உள்ளது. எனவே தமிழ் - தமிழர் ஏற்றம் பெற இம்மாநாட்டிற்கு நல்லாதரவு நல்க உங்கள் அனைவரையும் வேண்டி வரவேற்கிறோம்.

மிக்க நன்றி.

---

## வாழ்க தனிநாயகமடிகள்

சீர்பூத்த கலைவளமும் சிவமூலிப் பெருவளமும் சிறந்து பெருக்கும்
நீரேழுங் கடலுடுத்த நீலமங்கை நெடுந்தீவு மண்ணிலே
வேர்கொண்ட பரம்பரையாய் தனிநாயக முதலியென்னும்
பேர் கொண்ட பெருமகனார் பிறந்ததினால் முத்தமிழும் பெருமை கூறும்

மூவேந்தர் பரம்பரையில் முத்தமிழும் முக்கலையும் அரியணையில்
பாவேந்தர் புலவர்களால் பசுமையுடன் பைந்தமிழால் பொலிவுபெற்று
வாழ்வோடு வரலாற்றை வளப்படுத்தி நெறிப்படுத்தி மகிமைகாத்து
தாழ்வில்லா தமிழ்மொழியால் தரணியெலாம் ஆண்டிருந்த பெருமை கூறி

உலகத் தமிழினத்தின் உணர்வுகளை இலட்சியமாய் மனதிலிருத்தி
அகிலம் செழித்திடவே அருந்தமிழைப் பக்குவமாய் மேடையேற்றி
நிலவும் மொழிகளிலே நிலையான மூத்தமொழி தமிழ்தானென்று
பலரும் அதிசயிக்கப் பாரெங்கும் தமிழ் முழக்கம் செய்து நின்றார்

அடிமை விலங்குகள் உடைத்தெறியும் இலட்சியத்தை வளர்க்க வேண்டும்
கொடுமைகள் வேரோடு குடைசாய்க்கும் பக்குவத்தைப் பேண வேண்டும்
உரிமைக்காய் ஒற்றுமையாய் உணர்வுகளை உறுதியுடன் மனதில் தாங்கி
மறுமையிலும் மறத்தமிழன் மாண்பை மாந்தர் சுமக்க வேண்டுமென்றுரைத்து

மானிடம் வாழவே மகத்தான பணிசெய்து தினமும் மண்ணில்
ஆன்மீகம் தழைக்கவே அறநெறியால் மனங்களிலே அமைதிகாத்து
தெய்வீகவாழ்வினால் திருமறையின் பெருமைகளை உணர்த்தி நின்ற
மெய்ஞானத்தமிழ்ஞானி மேதினியில் செய்த பணி மறையவில்லை

எங்கள் வாழ்வும் இனியதமிழ் மொழியும் எமது மண்ணும் நாளை
சங்கம் வளர்த்து சரித்திரத்தைப் படைப்போமென்ற பெரியோர்வாக்கால்
எங்கும் எதிலும் இன்பத்தமிழ் முழங்கும் இலட்சியம் வெல்லும்
தங்கத்தமிழீழம் மலரும்போது தமிழனுக்கோர் விடிவு பிறக்குமென்றார்

வாழ்க இவரின் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்ப்பணிகள்
மலர்க தமிழ்பேசும் மழலைகளின் புதுஉலகம் தரணியெல்லாம்
நாளும் மறவாது நற்றமிழால் கவிமாலை சூட்டிடுவோம்
தமிழ் வாழும் உலகெல்லாம் தனிநாயகமும் வாழியவே!

ஆக்கம்
வேணுகோபாலன்
இலண்டன்

# M. K. SRI & CO

**SOLICITORS**
**&**
**ADMINISTRATORS OF OATHS**

**2C, FAIRHOLME ROAD,(OFF STATION ROAD)**
**HARROW,MIDDLESEX HA1 2TN**

**Tel: 0181515 7000 (4 Lines)**
**Fax: 0181 515 7030**
**Fax: 0181 515 7031** (For Conveyancing only)

**DX: 133196 HARROW(4)**

## We Specialise in:

* IMMIGRATION
* CONVEYANCING
* TRAFFIC OFFENCES
* CRIME
* MATRIMONIAL
* STATE BENEFITS

* ADVICE & ASSISTANCE AT POLICE STATION

Legal Aid

**LEGAL AID WORK UNDERTAKEN**

PRINCIPAL
M. K. SRITHARAN

ASSISTANT SOLICITORS
S.RAVINDRAN
MRS.S.SIVASANTHIRAN
MRS. CHITHRA S.SUNDARAM

ASSOCIATE
N. KRISHNARAJAH

# உலகளாவிய தொன்மைத்தமிழ்

ஐ.தி.சம்பந்தன்

**இன்று** உலகத்தில் எட்டுக்கோடி தமிழர்கள் பரந்து வாழ்கின்றார்கள் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற நோக்கோடு அன்று தொட்டு பல்வேறு நாடுகளுக்கு சென்ற தமிழர்கள் ஆங்காங்கு நிலை கொண்டனர். அங்கு தமிழர்களாக வாழ்கின்றனர். இதனால் தமிழ்மொழி, கலை, பண்பாடு உலகளாவிய ரீதியில் பரவியிருந்தன. இதற்கு சான்றுகள் பல உண்டு.

தமிழ் நாட்டில் நாகபட்டினம், பூம்புகார், மாமல்லபுரம், சென்னை ஆகிய துறைமுகங்களிலிருந்து தமிழர்கள் சென்ற நாடுகளிலிருந்து கொண்டு வந்த திரவியத்தை விட தமிழ் நாட்டின் கலைச்செல்வங்களுடன் தங்கள் உழைப்பினால் முன்னேறியோர் பலகோடி.

பாய்மரக்கலங்களில் பருவக்காற்று வீசிய திசைகளில் சென்ற தமிழர்கள் அவ்வவ் நாடுகளில் விட்டுச் சென்ற அடிச்சுவடுகள் அந்த நாடுகளில் தமிழின் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. கிறிஸ்துவிற்கு முதலாம் நூற்றாண்டில் தென்திசை நாடுகள் இந்து மன்னன் கவுண்டியாவின் ஆளுமையில் இருந்தது என்று வடமொழி நூல்களால் அறிகின்றோம்.

வியட்நாம், கம்போடியா, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகள் கவுண்டியாவின் ஆளுமையில் இருந்தன. கி.பி. 6ம் நூற்றாண்டு வரை இந்து மன்னர்கள் ஸ்ரீ மாரா அமராவதி பாண்டுரங்கா ஸ்ரீவிஜயா கவுதாரா ஆகியோரின் ஆட்சியில் அந்நாடுகள் இருந்தன.

கம்போஜம் என்ற பெயரில் விளங்கிய கம்போடியாவில் கி.பி. 1181 முதல் 1219 வரை முதலாம் ஜெயவர்மனின் ஆட்சியில் கட்டப்பட்ட ஆலயங்கள் தமிழர்களின் கட்டிட சிற்பக்கலைச் சிறப்பை இன்றும் அந்த நாட்டில் எடுத்துக் காட்டி வருகின்றன.

கம்போடியாவில் இன்று தேசிய சின்னங்களாகப் போற்றப்படும் அங்கோரராசாட் கோயில்கள் பல நூறு கிலோமீட்டர் பரப்பளவில் உலகோரை வியக்க வைக்கும் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றன. ஜெயவர்மனின் ஆட்சியில் வெளியிடப்பட்ட நாணயங்களில் இந்தக் கோயிலின் கோபுரம் ஒரு பக்கமும் சிவ விஷ்ணு உருவங்கள் மறுபுறமும் இடம் பெற்றிருக்கின்றன. அந்த நாணயங்களைக் கம்போடியாவின் அரும் பொருளகத்தில் இன்றும் காணலாம். 12ம் நூற்றாண்டில் பர்மா, லாவோஸ், வியட்நாம் கம்போடியா நாடுகளில் பரவிய இந்து சமயமும் பண்பாடும் தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோநேசியா நாடுகளையும் தழுவிக் கொண்டது. கம்போடியா போன்ற வியட்நாம் சம்பா சாம்ராஜ்யம் என்ற பெயரில் தமிழர்களின் பண்பாட்டுடன் இரண்டாம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரை நீடித்து இருந்ததாக வரலாறு கூறுகிறது.

தென்கிழக்காசிய நாடுகளில் மியன்மார், கம்போடியா, லாவோஸ், வியட்நாம், தாய்லாந்து நாடுகளை அடுத்து இந்தோநேசியா, மலேசியா நாடுகளிலும் தமிழ்ப்பண்பாடும் கலையும் மொழியும் இரண்டறக் கலந்திருக்கிறது. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் பத்து விழுக்காட்டுக்குக் குறைவான தமிழர்களே வாழ்ந்தாலும் தங்களை அடையாளம் காட்டும் விதத்தில் அரசியல் வாணிபம் பொதுத்துறைகளில் செல்வாக்குடன் திகழ்வதைக் காண முடியும்.

சிங்கப்பூரில் தமிழ் அரசாங்க மொழியாக ஏற்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் தமிழில் பேசுவதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரில் ஒலிபரப்புச் சேவையில்

தமிழ்மொழி முக்கிய இடம் பெற்றுள்ளது. உலகத்திலேயே முதல் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சி முதல் வண்ணத் தொலைக்காட்சி நிகழ்ச்சி சிங்கப்பூரில் தான் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பல இன மக்கள் மத்தியில் தமிழர்கள் தங்கள் உரிமையைப் பேணிவருவது போற்றத்தக்க விசயம்

மத்திய யாவாவில் பெரமபகளான் என்ற ஊரில் பிரமாண்டமான சிவன்கோவில் பெரும் பிரகாரங்களுடன் அமைந்திருப்பதைக் காணலாம். இந்த சிவன்கோவில் மூன்று மைல் பரப்பளவில் கி. பி. நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. தென்திசை நாடுகளில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழனின் ஆளுகையில் விட்டுச் சென்ற சின்னங்களில் சிறந்த சான்றாக இது இன்றும் திகழ்கின்றது.

சிங்கப்பூரில் தமிழ் அரசாங்க மொழியாக ஏற்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் தமிழில் பேசுவதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்து மாகடலில் மொரீசியஸ் தீவுக்கு இருநூறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ரெயூனியன் என்ற தீவில் இன்று இரண்டரை இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். தமிழ் பேசுவோர் ஒருவரும் இங்கு இல்லை என்பது வருத்தத்திற்குரியதே. தமிழ் பேச முடியாமல் போனதற்கு ரெயூனியன் தமிழர்கள் மிகவும் வருத்தப்படுகின்றனர். இன்று பெரும் முயற்சியெடுத்து தமிழ்மொழியைப் படிக்க ஆசைப்படுகின்றனர். அவர்களிடையே இந்து சமய வழிபாடு மிகுந்து காணப்படுகிறது. ஆலயங்கள் அமைத்து வழிபாடு விழாக்கள் நடத்தி வருகின்றனர்.

எந்தத்தொழில் செய்யினும் எந்த நிலையிலிருப்பினும் தங்கள் தமிழ்ப்பழக்க வழக்கங்களை இன்று கூட மறக்கவில்லை. அந்த ரெயூனியனில் தமிழ்மொழியைப் பேச முடிந்தால் இங்குள்ள தமிழர்கள் நாங்களும் தமிழர்களே என்று மார்தட்டிச் சொல்லலாம். இவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்க தமிழருக்கென்று ஒரு நாடு இல்லையே!

ரெயூனியனுக்கு அருகிலுள்ள மொரீசியஸ் தீவிலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழர் என்ற ஓர் இனம் இங்கு நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறது என்பதற்கு ஆதாரமாக இருப்பது அவர்களுடைய இந்து சமய கலாச்சார வாழ்க்கை நெறிமுறைகளும், தமிழ்ப் பெயர்களுமேயாகும். இங்கு நடைபெறும் தைப்பூச விழா மிகப் பிரமாண்டமானது. ஏனைய இந்துசமய வழிபாடுகளும் சமய ஆசாரப்படியான திருமண விழாக்களும் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. தமிழர்களாக இருந்தும் பெரும் தொகையினர் தமிழைப் பேச முடியாத நிலை. அதற்கான தமிழக் கல்வியூட்டும் நடவடிக்கைகைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

இங்கு உலகத்தமிழர் மருத்துவக்கல்லூரி ஒன்றை உருவாக்குவதற்கும், உலகின் பல பாகங்களில் வாழும் தமிழர்களுடைய பிள்ளைகள் இங்கு மருத்துவக் கல்வி கற்பதற்கும் அதன் மூலம் உலகத்தமிழர்களிடையே தமிழ் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தலாம் என மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு அங்கு வாழ் தமிழர்களின் ஆதரவும், மொரீசியஸ் அரசின் ஆதரவும் கிடைத்தன. எனினும் அந்தத்திட்டம் இன்னமும் செயலுருப் பெறவில்லை. தமிழருக்கென்று ஒரு சுதந்திரத் தமிழ்நாடு உலகில் எங்காகுதல் இருந்திருப்பின் அனைத்துலகத் தமிழர் மருத்துவக்கல்லூரி நிறுவப்பட்டிருக்கும். அதன் மூலம் உலகத்தமிழர்கள் ஒன்று சேர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் தமிழ்க்கல்வி மூலம் ஒன்று பட்டு வாழ்கின்றனர். அமெரிக்காவில் மொத்தம் ஆறு பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ்மொழியினைக் கல்லூரியில் கற்பதற்கும், இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம் இவற்றினை அறிவதற்கும் பல்கலைக்கழகங்களும் அத்துடன் இணைந்துள்ள நூலகங்களும் சிறந்த

மையங்களாக இருக்கின்றன. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தமிழ்க்கல்வியும் தமிழில் செய்யப்படும் ஆராய்ச்சிகளும் நன்முறையில் வளர்ந்து வருகின்றன. பல்கலைக்கழகங்களின் வாயிலாகத் தமிழ் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. கனடாவில் இன்று ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் ஒரே இடத்தில் நெருக்கமாக வாழ்கின்ற வாய்ப்புண்டு. இதனால் கூட்டு முயற்சியால் தமிழ் கலை பண்பாடுகளை வளர்ப்பதற்கு வசதிகள் காணக் கூடியதாகவுள்ளது. 1980ம் ஆண்டிற்கு பின்னரே பெருந்தொகையான தமிழர்கள் அங்கு குடியேறியுள்ளனர்.

கனேடிய அரசாங்கம் வழங்கும் வசதிகளும் வாய்ப்புகளும் சட்ட திட்டங்களும் ஏனைய நாடுகளை விட சுதந்திரமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ்க் கலை கலாசார வளர்ச்சி இங்கு குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்து வருகிறது. இளந்தலைமுறையினருக்கு தமிழ் மொழி தமிழ்க்கலை புகட்டுவதற்கு பல தமிழ்ப்பாடசாலைகளும் தமிழ் மன்றங்களும் இயங்கி வருகின்றன. சமய வளர்ச்சிக்கு பல ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழில் ஆர்வமும் ஆழமும் கொண்ட மூத்த தலைமுறையினர் அங்கு பெருந்தொகையாக வாழ்வதனால் தமிழ் வளர்ச்சி போற்றத்தக்களவு செழிப்புற்று வருகிறது.

"கனடாவில் தமிழரும் பண்பாடும்" பற்றி திருமதி . செ. ஸ்ரீநிதாஸ் அவர்கள் எட்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு மலருக்கு எழுதிய கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

கனடாவில் தமிழ் மொழிக் கல்வி துரிதகதியில் முன்னேறி வருகிறது என்று தான் சொல்ல வேண்டும். தமிழைப் பேசவும், எழுதவும், படிக்கவும் முன்வந்து கொண்டு இருக்கும் மாணவர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழ்ச்சங்கங்கள் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடாத்தித் தமிழ்ச்சிறார் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தை வளர்த்து வருகின்றன. வெகுசனத்தொடர்பு சாதனங்களும் இவற்றிற்குத் துணை போகின்றன. ஏற்கனவே கூறிக்கொண்டது போல் "தொரோன்றோ"வில் மட்டுமே பத்துக்கு மேற்பட்ட பத்திரிகைகள் வெளிவருகின்றன. வாரத்தில் ஏழுநாள்களும் வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. வானொலியில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளின் கால அளவை இருமடங்கு ஆக்குகின்ற முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாளுக்கு அரை மணி விகிதம் வாரத்தில் இரண்டு நாள்கள் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இவற்றை விடக் கனேடிய அரசாங்கமும் பாரம்பரிய மொழி கலாசாரம் இவற்றைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் பெரும் பங்கு கொள்கின்றது. பாடசாலைகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இதன் பிரதிபலிப்பாகத் தொரொன்றோ கல்விச்சபையின் கீழ் இயங்கும் பாடசாலை ஒன்றில் தமிழ் மொழி கற்க விரும்பும் (Option) மாணவருக்கென்று தமிழ் கற்பிக்கப்படுகிறது.

தமிழ்க்கலாசாரம் பழம் பெருமை மிக்க ஆதி கலாசாரங்களில் ஒன்றாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றையுடைய நாம் உலகம் போற்றும் வாழ்க்கைத் தத்துவங்களை உள்ளடக்கும் பண்பாட்டினைப் பேணிக் காக்கின்றோம். ஆண்டாண்டு காலமாக எம் முன்னோர்களால் வாழ்ந்து வகுக்கப்பட்ட கட்டுக்கோப்பான ஒரு குடும்ப வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கின்றோம்.

# திருக்குறள் கல்லூரிக்கு நிதி வழங்கி ஆதரவு நல்குங்கள்

திருக்குறள் உலகத் தமிழ் பொதுநூல்- மெய் விளக்க நூல்-மனித வாழ்வில் துன்பம் துடைத்து இன்பம் காக்க வழி காட்டும் கருத்தடக்க நூல்.

ஞான நெறி காட்டிய பெரியார்களுள் சிறந்த ஒரு பேரறிஞர் திருவள்ளுவர். அவர் "படைப்பு" என்ற கற்பனையிலிருந்து விடுபட்டு "பரிணாமம்" என்ற உண்மை வழியிலே முழுமை பெற்ற மெய்ஞ்ஞானி ஆவார்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன் ஆக்கிய திருக்குறள் என்றும், எப்பொழுதும், எவருக்கும் ஏற்புடைய வாழ்க்கை நெறி நூல். தமிழ் மொழியில் இத்தகைய பெருமைக்குரிடய நூல் ஆக்கப்பட்டது தமிழுக்கும், தமிழர்களுக்கும் என்றும் பெருமை பயக்கக்கூடியதாகும்.

இத்திருக்குறளின் பெயரால் ஆராய்ச்சிக் கல்லூரி நிறுவப்படுவது சாலப்பொருத்தமானதே! இந்த உயரிய பணியை வீரப்பன் அறக்கட்டளை மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்கது.

---

## புதுச்சேரியில் கட்டப்படும் திருக்குறள் கல்லூரிக்கு நிதி வழங்க வேண்டுகோள்!

1996ல் இந்தியாவில் புதுச்சேரி மாநிலத்தில், புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு கிழக்கே, கடற்கரைப் பகுதியில், வீரப்பனார் அறக்கட்டளை அமைத்துவரும் திருக்குறள் தமிழியக்கக்கல்லூரி, உலகளாவிய பல்கலைக்கழக நிலைக்கு விரிவுபடுத்தப்படும். பத்தாண்டில் அதன் கட்டிட வேலைகள் முடிந்து, திருக்குறள் அறக்கல்விக் கூடமாக இயங்கும்.

இப்போது சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. உள்ளே விடுதிகள் திசம்பருக்குள் கட்டத் தொடங்கும். பிறகு வட்டக்கட்டிடம், பிறமண்டபங்கள், உணவகம், வீடு யாவும் படிப்படியாகக் கட்டி முடிக்கப்பட்டு விடும்.

கல்லூரி வாரியம் இதற்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து வருகிறது. திருவள்ளுவர் கோட்டமான இவ்வளாகத்துக்குள், படிப்பகம், நூலகம், ஆவணக்களஞ்சியம், கலைக்கூடம், குறளாய்வகம், பதிப்பகம், பன்மொழித் திருக்குறளாய்வரங்கு, ஓகமடம், திருவள்ளுவர் ஆலயம் அமைக்கப் பெறும். உலக மொழிகளிலுள்ள திருக்குறள் நூல்கள் இங்கு ஒப்பாய்வு செய்யப்படும்.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கப் பன்னாட்டுக் கிளைகளும், பலநாட்டுத் தமிழ்ச்செல்வர்களும், அதற்கு நிதி தந்து ஆதரிக்க வேண்டுமெனக் கோருகிறோம். உலகம் எங்குமிருந்தும் வந்து போகும் சுற்றுலாத்தமிழர்கள் இங்கு தங்கி ஓய்வு பெறலாம்.

இதற்கு இருபது லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. உங்கள் நன்கொடையைக் கனிவுடன் வழங்கிப் பேராதரவு தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி - வணக்கம்.

வீரப்பனார் அறக்கட்டளை வாரியம்
43 வள்ளலார் வழி - நடுப்பாதை
சின்னக்காலாப்பட்டு, பெரிய காலாப்பட்டு
புதுச்சேரி - 605 014
இந்தியா.

தேமதுரைத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

# 2000 ஆம் ஆண்டு
# உலகத் தமிழ்க் கவிதைத் தேர்வு

கவிதைப் பொருள் – "வருக தமிழர் பொற்காலம்"

கவிதை அளவு – 48 வரிகளுக்கு மேற்படாது இருக்க வேண்டும்

கவிதை அனுப்பும் நிறைவு நாள் – 15–11–1999

எல்லா நாடுகளில் உள்ளவர்களும் பங்கு பெறலாம். கவிதை தலையங்கத்துக்குப் பொருத்தமாக இருத்தல் அவசியம். சொந்த ஆக்கம் என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

| | |
|---|---|
| முதற் பரிசில் – | 150 பவுண்டுகள் |
| இரண்டாம் பரிசில் – | 100 பவுண்டுகள் |
| மூன்றாம் பரிசில் – | 75 பவுண்டுகள் |

அடுத்து வரும் ஐந்து கவிதைகளுக்குத் திறமைச் சான்றிதழ் வழங்கப் பெறும்.

அனைத்திலும் நடுவர் தீர்ப்பே முடிவானது. தெரிவு பெறும் கவிதைகள் ஒரு நூலாக வெளியிடப் பெறும். 21ம் நூற்றாண்டில் புதியதோர் சமுதாய அமைப்பு ஒன்று தமிழர்களுக்கு உருவாகுவதற்கான முன்னோடியாக இக்கவிதைத் தேர்வு ஒழுங்கு செய்யப் பெற்றுள்ளது.

கவிதை அனுப்பவதற்கான முகவரி- கவிதைப் போட்டி 2000
Chuderoli Publication Society
Flat 1 198 Neville Road
London E7 9QN UK

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கச் சுடர்க வையகமே (மகாகவி பாரதி)

**அறிஞர் அண்ணா** 15.09.1909ல் தோன்றினார். மறைமலையடிகள் 15. 09. 1950ல் மறைந்தார். இவ்விரு பெருமக்களின் தோற்றமும் மறைவும் செப்டம்பர் 15ல் நடைபெற்றுள்ளதால் இந்நந்நாள் பெருமை பெற்ற நாளாக விளங்குகிறது.

மறைமலையடிகளாரின் எண்ணும்தோறும் வியக்கத்தக்க மாண்பினை அவரோடு நெருங்கிப் பழகிய பலரும் எடுத்துரைத்திருக்கிறார்கள். நான் அவரோடு அதிகம் நெருங்கிப் பழகியவன் அல்ல. அவரோடு எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பெல்லாம் அந்நாட்டில் முதலில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தான். மறைமைலையடிகளாரது புலமை, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட எங்களுக்கெல்லாம் பெரும் அரணாக அமைந்திருந்தது. இந்தி தமிழகத்துக்குத் தேவை தானா? அது தமிழகத்துக்குப் பொது மொழியாகத்தான் வேண்டுமா? அப்படிப் பொது மொழியானால் தமிழுக்கு ஏற்படக்கூடிய தீமைகள் என்னென்ன என்பதை எல்லாம் மறைமைலையடிகளார் ஏடுகளின் வாயிலாக எடுத்துக் காட்டி வந்தார்கள்.

# தமிழர் மறுமலர்ச்சியின் தந்தை

**மா. க. ஈழவேந்தன்.**

இதைப்போல, அவர் மேற்கொண்டிருந்த பல்வேறு முயற்சிகள் இன்று காலத்தால் கனிந்து வருகின்றன.

மறைமலையடிகளுக்குப் பெற்றோரிட்ட பெயர் சுவாமி வேதாசலம். இதனை அவர் மறைமலையடிகள் என மாற்றிக் கொண்ட போது பலருக்கு ஐயப்பாடு. சிலர், இது என்ன புதியதோர் புலி என்று கேட்டனர்.

ஆனால், மறைமலையடிகளோ தமிழனுக்கு எனத்தனி மொழி உண்டு என்பதை நிலைநாட்டுவதில் மிக அக்கறை காட்டினார். இப் பண்பும், மொழியும் காப்பாற்றப்படாவிடின் நாளாவட்டத்தில் தமிழர்கள் இப்பண்பையும், மொழியையும் மறந்து தங்களுக்கென உள்ள சீரிய தன்மையை இழந்து விடுவர். உலகில் அன்றுள்ள வாழ்வு இழந்த இனத்தாரோடு தமிழரும் சேர்க்கப்பட்டுவிடுவர். எனவே தமிழர்கள் தங்கள் மொழியையும், பண்பாட்டையும் மறந்து விடக்கூடாது என்பதற்காக மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் என்ற பெயரால் சீரியதோர் முயற்சியை மேற்கொண்டார்.

இந்த இயக்கத்தை அவர் தோற்றுவித்த போது, இது வெற்றி பெறுமா என்று சிலரும் இது வேண்டப்படுவதுதானா என்று வேறு சிலரும் இதனால் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் என்ன பயன் என மற்றும் சிலரும் வினவத் தொடங்கினார்கள்.

ஆனால் இன்று யார் நடத்துகின்ற ஏடானாலும், தனித்தமிழ் இயக்கத்தை எதிர்த்தவர்கள் ஏடானாலும் அதில் தனித்தமிழ் நடை கையாளப்படுவதை நாம் காணுகிறோம்.

மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ளதற்கு அறிஞர் அண்ணா அளித்துள்ள இக்கூற்று தலைசிறந்த சான்றாக அமைகிறது.

பாட்டிற்கொரு புலவன் பாரதி தன் பாடல் திறத்தால் பைந்தமிழை வாழ்வித்ததை நாம் மறுப்பதற்கில்லை. இவருடைய நாட்டுப்பற்றும், அவர் கையாண்ட எளிய உணர்ச்சி மிக்க நடையும் காலத்தின் தேவையை நிறைவு செய்து, தமிழ் மக்களைப் புதிய வழியில் இட்டுச் சென்றதை நம்மவர் ஏற்றேயாக வேண்டும். அதே வேளையில், தமிழ் மொழியில், படிந்த எல்லை மீறிய பிற மொழி மாசினைக் கறைந்து தமிழின் தூய்மையைப் பேணி, தமிழனைத் தமிழனாகவும் வாழ வைத்த பெருமை மறைமலை அடிகளாருக்கே உண்டு.

மொழி ஒரு இனத்தின் வழி மட்டுமல்ல. மொழி அதனின் உயிராகும். ஒரு மொழி அழிகின்ற போது, அம்மொழியைப் பேசுகின்ற இனமும் அழிகின்றது. ஒரு தேசிய இனத்தின் உயிர் நாடி அதன் மொழியாகும். புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் "தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கே நேர்" என்று ஆணித்தரமாகத் தமிழுக்கும், தமிழ் இனத்துக்குமுள்ள

பிரிக்க முடியாத பிணைப்பைப் பீறிட்டு எழும் உணர்ச்சியுடன் மொழிந்துள்ளார்.

மேற்கூறிய கூற்றுக்கள் அனைத்தையும் நாம் நினைவில் கொள்ளும் போதுதான் மறைமலையடிகளாரின் மாண்பினையும் நாம் உணரும் நிலை ஏற்படுகிறது. தமிழன் தன் மொழி எது, தன் பண்பாடு எது, தன் நாகரீகம் எது, தனது நெறி எது, தனது வாழ்வியல் முறை எது என்ற உணராது தத்தளித்துத் தன் நிலை மறந்திருந்த வேளையில் தமிழனுக்குத் தன் இன உணர்வை, மொழி உணர்வை ஊட்டியவர் மறைமலையடிகளார். இன்று ஆட்சிமன்றங்களிலும், தமிழ் மன்றங்களிலும் நல்ல தமிழ் –தூய தமிழ் அரசோச்சுகின்றது. அதற்கு அடிகோலாக பெருமை தானே ஒரு தனி ஆக்கமாக விளங்கி எதிர்ப்புக்கள் அனைத்தையும் துணிவுடன் தாங்கிய மறைமலையடிகளார் ஆற்றிய பணியின் விளைவே என்பதனை அவரின் கொள்கையுடன் மாறுபடுவோர் கூட ஏற்றேயாக வேண்டும். அன்று நல்ல தமிழில் எழுதாவிட்டால், நல் அறிஞர்களின் மதிப்பினையோ, வாழ்த்தினையோ பெற முடியாததோடு, தமிழ் பொது மக்களும் வரவேற்க மாட்டார்கள் என்ற நிலையும் இன்று உருவாகியுள்ளது. இவை எல்லாம் மறைமலையடிகளாரின் இயக்கம் ஏற்படுத்திய தாக்கமேயாகும்.

தனி ஒரு மானிடனாக நின்று தன்னை எதிர்த்த எதிர்ப்புகளையெல்லாம் தூளாக்கி வெற்றி கண்டவர் மறைமலையடிகளார். தனியொரு மானிடரால் இவ்வெற்றியை ஈட்ட முடியுமெனில் தமிழ் இனம் ஒருங்கிணைந்து தன்னிலை உணர்ந்து தமிழைத் தமிழாக வாழ்விக்க உறுதி பூணில் எவரும் அதனைத் தடுக்க முடியாது. இன்று தமிழினை எதிர் நோக்கும் பெரும் அழிவுக்கு அடிப்படைக்காரணம் பிற நாட்டுப்படையெடுப்போ அல்லது பிற இனத்தின் ஆட்சியோ அல்ல. இவையனைத்திற்கும் மேலாகத் தமிழனுக்குத் தன்மீது நம்பிக்கையின்மையே இவ்வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாக அமைகிறது.

எனவே ஒவ்வொரு தமிழனும் குறிப்பாக ஒவ்வொரு தமிழ்மாணவனும், மாணவியும் தன் மொழியின் தனி ஆற்றலில் நம்பிக்கை வைத்து தனித்தியங்கவல்ல அதனின் தன்மையில் உறுதிபூண்டு செயலாற்றின், வெற்றி நமதே. எம் அறிவின் பஞ்சத்தை நெஞ்சத்தை எம்மொழியின் பஞ்சமாக ஆக்காது, காலத்தின் கருத்தோட்டத்திற்கேற்ப நம் மொழியைப் பலதுறைகளிலும் வளமாக்க முயல்வது நமது தலையாய கடனாகும்.

மொழியில் செம்மையிருப்பின் கருத்தில் தெளிவு பிறக்க கருத்துத் தெளிவோடு ஆட்சி அமையின் அவ்வாட்சியில் அமைதி நிலவும். எனவே, செந்தமிழில் செம்மை காண விழைந்த மறைமலையடிகளாரின் முயற்சி, ஆட்சியிலும் அமைதி காண துணை நிற்கிறதென்று எம்மனோர் துணிவு.

மறைமலையடிகளின் பணி, மொழியின் தூய்மை காப்பதோடு நிற்கவில்லை. அவர் பல்துறையில் பல நூல்கள் பலவற்றை யாத்துள்ளதையும் நாம் நினைவு கொள்ள வேண்டும்.

அவரின் நூல்கள் ஆயிரம் மூளைகளைச் சிந்திக்கச் செய்யும். பத்து ஆயிரம் நாக்குகளைப் பேசச் செய்யும். அத்தோடு ஒரு நூற்றாண்டு காலத்திற்கு ஆற்றல் மிக்க எழுத்தாளர்களை உருவாக்கும். மறைமலையடிகளின் நூல்களை நுகர வேண்டிய முறையில் நுகர்வோர் அவ்வுண்மையை உணர்ந்தவர் ஆவர்.


SAI PROPERTY SERVICES

Sales,
Lettings,
Property Maintenance &
Financial Consultancy

48 SHAKESPEARE CRESCENT
MANOR PARK,
LONDON E12 6LN

**Tel : 0181 548 9496**
**Fax : 0181 470 4333**

கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாட ல்ல மற்ற யவை (குறள்400)


# THANA & CO

***Solicitors Administrators of Oaths***

## We specialise in

- IMMIGRATION
- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- LITIGATION
- PERSONAL INJURY
- STATE BENEFITS
- TRAFFIC OFFENCES
- ADVICE & ASSISTANCE AT POLICE STATIONS

Legal Aid

Legal work undertaken

***Contact: Mr.T.Thana***

**336 Hoe Street, Walthamstow, London E17 9PX**

**Tel: 0181 521 4686**

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே (புறம் 132)


# Markandan & Co

## Solicitors

Empowered to Administer Oaths

***M. Markandan*** *LL.B.*

- **Immigration/Home Office**
- **Refugee - Asylum**
- **Commercial Conveyancing**
- **Matrimonial**
- **Licensing**
- **Representation at Police Stations**
- **House/Flat Purchase or Sale etc.**

LEGAL AID
WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK AND KEEN TO HELP.

**Thamil House,**
**720 Romford Road, Manor Park,**
**London E12 6BT**

# TEL: 0181-514 8188
# FAX: 0181-514 8303

# தந்தை செல்வா

## ஈழத்து காந்தி

தமிழர்களுக்கு ஓர் தாயகம் உருவானால் உலகத் தமிழர்களுக்கு விடுதலை எனக் கூறிய தமிழ் தலைவர் தந்தை செல்வா.

அத்தலைவரின் நூற்றாண்டு நினைவு சென்றாண்டு தமிழர் வாழுமிடமெல்லாம் நினைவு கூரப்பட்டது. அதையொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.

**தமிழர்களுக்கு** ஓர் தாயகம் உருவானால் உலகத்தமிழர்களுக்கு விடுதலை கூறிய தமிழ்த்தலைவரின் தந்தை செல்வா தமிழ்த் தந்தை என்றும், ஈழத்து காந்தி என்றும், பெரியவர் என்றும், இலங்கைத் தமிழர்களால் போற்றப்படும் தலைவர் பிறந்த நூற்றாண்டு நிறைவு முகமாக 1998ல் இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்கள் விழா எடுத்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத் தமிழர் வரலாறு, உணர்ச்சியும் கிளர்ச்சியும் கலந்து உருவான ஒரு காவியம். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை (எஸ். ஜே. வி.) செல்வநாயகம் என்பது அந்தக் காவியநாயகன் பெயர். கடந்த அரை நூற்றாண்டு காலமாக ஈழத்தில் எழுச்சி கொண்டுள்ள தமிழ் தேசிய வாதத்தின் தந்தை இவர். பெரியவர் செல்வா தலைமையில் 1974 மே மாதம் யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் முதன் முதலாக பிரகடனப்படுத்தப்பட்ட சுவீகரித்துக் கொண்டதும், இதனால் மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும் ஓரங்கட்டப்பட்டதும் தனிக்கதை. எனினும், தீவிரவாதிகளும் மிதவாதிகளும் செல்வாவைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழருக்கு இனவுணர்வை ஊட்டியவர் என நிதானவாதிகளும், தம் நெஞ்சங்களில் விடுதலை வேள்வித் தீயை மூட்டியவர் என தீவிரவாதிகளும் இவரைப் போற்றுவார்கள்.

1948-ம் ஆண்டு இலங்கை அரசு தோட்டத் தொழிலாளர்களான பத்து லட்சம் இந்திய வம்சாவளித்தமிழர்களின் பிரஜா உரிமையையும், வாக்குரிமையையும் சட்டத்தின் மூலம் ரத்து செய்தது. இதனால் இவர்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திலிருந்த ஐந்து எம். பிக்கள்

## கரிகாலன்

தனித்தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசியலில் போராட்டமயமான ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தது. ஈழத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் இன்று ஏற்பட்டிருக்கும் தீவிரப் போக்கையும், பயங்கரமான பரிமாணங்களையும் செல்வா நிச்சயம் எதிர்பார்த்திருக்க முடியாது.

1977-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு மாதத்திற்கு முன்பாகவே செல்வா மறைந்து விட்டார். ஆயினும், தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து அமோக வெற்றியீட்டி, நாடாளுமன்றத்தில் தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக விளங்கியது. 1983 ஜூலை மாதம் இலங்கையில் அரங்கேறிய தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து தமிழரின் அரசியல் வாழ்வை தீவிரவாதிகளான ஆயுதப் போராளிகள் பதவியிழந்தனர். (இன்று அமைச்சராயிருக்கும் தொண்டமான் அவர்களும் ஒருவர்). நாடாளுமன்றத்தில் இச்சட்டத்துக்கு ஆதரவாக தாம் சார்ந்திருந்த கட்சி வாக்களித்த போது, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வா எதிர்த்து வாக்களித்து விட்டு கட்சியிலிருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியை நிறுவினார். இந்தியாவில் அமைந்துள்ளது போல சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையில், தமிழர் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை அனைத்து தனி மாநிலமாக்க வேண்டும் எனக் கோரியதால் இக்கட்சியை "பெடரல் கட்சி" என அழைத்தனர்.

கண் உள்ளவர்களே! பார்த்துக் கொள்ளுங்கள். இன்று இந்தியவம்சாவளித் தமிழனுக்கு இழைக்கப்படும் அநீதி நாளை இலங்கைத் தமிழனுக்கு எதிராகவும் நடக்கும். சிங்களப்

பேராதிக்கப் பிரளயத்தை இன்றே தடுத்து நிறுத்த வேண்டும் என செல்வா தீர்க்கமாக எச்சரித்தார். இந்தியாக்காரன் என நிந்திக்கப்படும் தமிழனும், இலங்கைத் தமிழனும், உறவால் ஒன்றுபட்டவனே என்ற புதிய மந்திரத்தை இலங்கைத் தமிழர்களுக்கு உணர்த்தினார்.

தமிழரசுக் கட்சிக்கு கருவிலேயே கண்டம். 1952-ம் ஆண்டு தேர்தலில் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பெரியவரே காங்கேசன் துறைத் தொகுதியில் தோல்வியுற்றார். அரசாங்கச் சார்புப் பத்திரிகைகள் சமஷ்டிக்குச் சாவு மணி என கொட்டை எழுத்துகளில் தலைப்பிட்டு கொக்கரித்தன. செல்வாவுக்கு கட்சி சந்தித்த முதல் தேர்தல் ஒரு தத்துவத்தின் பிரசவ வேதனை. தளர்ந்து விடாது தம் பணியைத் தொடர்ந்தார். அடுத்து நடைபெற்ற 1956-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தமிழர்களின் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றது. 1974-ல் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பரிணமித்தது.

செல்வா சட்டத்துறையில் சாதனைகள் புரிந்து கொழும்பிலுள்ள உச்ச நீதி மன்றத்தில் புகழ் பெற்ற வழக்கறிஞர். இதனால் பிரிட்டீஷ் மகாராணியால் வழங்கப்படும் **"Queen's Counsel"** என்ற தகைமை பெற்றவர். விருது பெற்ற வழக்கறிஞராயினும், தமிழர் உரிமைகளுக்காக சாத்வீக முறையில் சட்ட மறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைவாசம், தடுப்புக் காவல் என விழுப்புண் பட்டவர். இலங்கை அரசியல் களத்தில் காந்திய நெறியில் கிளர்ச்சிகள் அறிமுகப்படுத்தியவர் என்பதால் "ஈழத்து காந்தி" என்ற சிறப்புப் பெயருக்கும் உரியவர். ஒரு தடவை இந்தியப் பிரதமர் நேருவின் இலங்கை வருகையின் போது விமான நிலையத்தில் வரவேற்க வந்த செல்வாவை (அன்றைய) பிரதமர் பண்டாரநாயகா, "அடிக்கடி காந்தியக் கிளர்ச்சிகளை நடாத்தி என்னை மிரட்டுகிறவர் இவர்" என்று வேடிக்கையாகக் கூறி நேருவுக்கு அறிமுகம் செய்தார்.

இலங்கைத் தமிழர்கள் பிரதேச பேதங்களினால் பிளவுண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தான்-மட்டக்களப்பான்-வன்னியான் என இவர்களுக்குள் பரஸ்பர அவநம்பிக்கைகள்- மண்ணின் மைந்தர்கள் போன்ற பிரதேச கோஷங்களுக்கும் துவேஷத்துக்கும் குறைவில்லை. சிங்கள ஆட்சியாளர் தமிழர்களைக் கூறு போட்டு, துவேஷத் தீயை வளர்த்து குளிர் காய்ந்தனர். பிளவுகளை அகற்றி தமிழரை ஒரு கொடியின் கீழ் ஓரணியில் திரட்டி வலிமையான ஒரு சக்தியாக உருவாக்கியவர் பெரியவர் செல்வா.

அந்த அபூர்வ மனிதரின் தலைமையில் இன்னோர் அற்புதமும் நிகழ்ந்தது. இலங்கைத் தமிழர்களில் 87 சதவீதத்தினர் இந்துக்கள். பெரியவர் செல்வா ஒரு கிறிஸ்தவர். தமிழ்நாட்டை அண்மையில் விகாரப்படுத்தியுள்ள மதவெறி ஈழத் தமிழ்ச் சமுதாயத்தில் இல்லை. அங்கு தமிழரின் சகோதரத்துவ உணர்வுகளை மதாச்சாரியங்கள் ஆக்கிரமிக்கவில்லை. அவரை இறுதி வரை தம் தலைவனாக அபிமானத்துடன் ஆராதித்தனர்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக செல்வா போராட்டங்களை நடாத்துவதும், அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உறுதிமொழிகள் தந்து உடன்படிக்கைகள் செய்வதும் பின் அவற்றை மீறுவதும் இலங்கைப் பிரதமர்களுக்கு கைவந்த கலை. 1957-ல் (அதிபர் சந்திரிகாவின் தந்தையான) பிரதமர் பண்டாரநாயகாவுடனும் 1960-ல் தாய் சிறிமாவுடனும் அடுத்து 1965-ல் பிரதமரான டட்லி சேனநாயகாவுடனும், பெரியவர் செய்த ஒப்பந்தங்கள் எழுதிய மை உலர்வதற்கு முன்பாகவே மீறப்பட்டன. சிங்களத்தலைவர்களால் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டதாலும் தமிழரின் குறைந்த பட்ச கோரிக்கைகளைக் கூட சிங்களத்தலைவர்கள் நிராகரித்ததாலும் நிதானவாதியான செல்வா பிரிவினைக்குத் துணிந்தார். தமிழ் ஈழக்கோரிக்கையை முன்மொழிந்தார்.

1972-ம் ஆண்டு சிறிமா அரசு தமிழர்களின் உரிமைகளை மேலும் கட்டுப்படுத்தும் விதத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கிய போது தமிழரின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக தமது நாடாளுமன்றப் பதவியை ராஜிநாமா செய்து காங்கேசன் துறையில் இடைத்தேர்தலைச் சந்தித்தார். மீண்டும் அமோகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஈழத்தமிழர்களின் கோரிக்கைகளுக்கு இந்தியத் தலைவர்களின் தார்மிக ஆதரவைத் திரட்டுவதற்காக 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமிர்தலிங்கத்துடன் இந்தியா வந்தார் செல்வா.

பெரியார். பெ.ரா. காமராஜர், காயிதே மில்லத், ம.பொ.சி., கருணாநிதி உட்பட பல தமிழ்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அடுத்து பிரதமர் இந்திராகாந்தியைச் சந்திப்பதாக ஏற்பாடு. மிரண்டு போன இலங்கை, தூதர் மூலம் அச்சந்திப்பைத் தடுத்து நிறுத்திவிட்டது.

பெரியவர் செல்வா சிறிய விபத்தினால் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு 1977 ஏப்ரல் மாதம் 26ம் தேதி மறைந்தார். அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது அவரைப் பரிசோதிப்பதற்கென நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியைச் சென்னையிலிருந்து விசேஷமாக அனுப்பி வைத்தவர் அன்றையத் தமிழக முதல்வர் கருணாநிதி.

இலங்கை அரசியலில் நேர்மையும், கண்ணியமும் மிக்க ஒரு தலைவராக சிங்களத் தலைவர்களாலும் மதிக்கப்பட்டவர் செல்வா. அவர் மறைந்த போது நாடாளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய ஜெயவர்தன உட்பட அனைத்து சிங்களத் தலைவர்களும் பெரியவரின் தூய்மையான அரசியல் வாழ்வைப் பாராட்டிப் பேசினர்.

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என முன்பு இந்திய சுதந்திரப் போருக்கு கட்டியம் கூறினார் நாமக்கல் கவிஞர். தமிழர் உரிமைகளைக் காக்க பெரியவர் செல்வா சத்திய யுத்தத்தைத் தொடங்கினார். திவ்வியமாக ஆரம்பித்த போர் திசைமாறியதற்கு சிங்கள மக்களே பொறுப்பாளிகள். காந்திய நெறியில் தொடங்கி இன்று ஏ. கே. 47 துப்பாக்கிகள், ஏவுகணைகள், கனரக பீரங்கிகள் என பரிணமித்துள்ளது. வேலுப்பிள்ளை செல்வநாயகம் முதல் வேலுப்பிள்ளை பிரபாகரன் வரை, போராட்டப் பாதையில் தமிழரின் நீண்ட பயணம் இன்னும் முடியவில்லை. முடிவதாகவும் இல்லை. ஆயிரக்கணக்கானோர் யுத்த களத்திலே செத்து மடிந்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர் உற்றார் உறவினரையும், வீடு வாசல்களையும் இழந்து அகதிகளாயுள்ளனர். யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தைக் காலத்தின் கொடுமை என்பதா? கடவுளின் சாபம் என்பதா? இங்கு அவல வாழ்வை நடாத்தும் தமிழர்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் "தமிழரை இனி கடவுள் தான் காக்க வேண்டும்" என்றார் செல்வா. விரக்தியில் கூறினாரா அல்லது விஷயம் அறிந்து தான் கூறினாரா?


# Nathan, Suresh & Amirthan

## Solicitors

FOR ALL YOUR LEGAL MATTERS

2nd Floor
150A, Ealing Road
Wembley
Middlesex HA0 4PY

**Tel: 0181 903 7211**
**Fax: 0181 795 4056**

Legal Aid

***also at;***

**92A The Broadway**
**Southall**
**Middlesex**
**Tel: 0181 574 3356**
**0181 574 1058**
**Fax: 0181 571 1610**

# PARAM & CO

## SOLICITORS

- Civil Litigation and Civil Liberties
- Immigration and Nationality Matters
- Crime
- Personal Injuries
- Commercial Litigation
- Conveyancing (Residential & Commercial)
- Entertainment Law
- International Transactions

Legal Aid

**LEGAL AID CASES UNDERTAKEN**

*S.Paramalingham BA, LLM*
*Assistant Solicitors*
*Miss Hina Rajshakha(L.L.B.Hons)*
*Mrs Nithy Sivasanthiran*
*Miss Priti Patel LLB*

**"Segaram House"**
**221 Edgware Road, Colindale**
**London NW 9 6LP**
**Tel : 0181 200 3500**
**Fax : 0181 200 1360**

என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறு – திருமூலர்


# Vetti & Co

**Solicitors**

*FOR ALL YOUR*
*LEGAL REQUIREMENTS*

**411A Brixton Road**
**London SW9 7DG**

**Tel: 0171 274 0100**
**Fax: 0171 738 4655**

# பண்பாட்டுப் பாதுகாவலன் நல்லை நகர் நாவலர்

**தசரதன்** அரண்மனையிலே வீற்றிருக்கிறான். அங்கே விசுவாமித்திர முனிவர் வருகின்றார். வந்தவரை வணங்கி வரவேற்ற தசரதனிடம் முனிவர் தான் செய்யும் தகை வேள்விக்கு நிருதர் இடையூறு விளைவிக்காதபடி செருமுகத்துக்காத்தியெனக் கூறியவர், அதற்கு நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடு எனக் கூறா நிற்கின்றார். செம்மல் என்றது இராமனைச் சுட்டி நிற்கின்றது. கல்வியானாலும், பயிற்சியினாலும் மனதைச் செம்மைப் படுத்தி ஒழுக்க நெறியில் நிற்பவனே செம்மல் எனப்படுவான். ஆங்கிலத்திலே Culture என்பது தமிழிலே பண்பாடெனப்படுகிறது. Culture அறிவு வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் குறிக்கும். மனதைப் பண்படுத்துவதே கல்வியின் குறிக்கோள். எனவே இயல்பாகவுள்ள அறிவுடன் கல்வியறிவும் அனுபவமும் சேர்ந்து மனிதனைப் பண்பாடுடையவனாக்குகின்றது. ஒருவனது உயர்வு மனநலத்தால் ஆக்கமடைகின்றது. மனம் தனிப்பொருள் அல்ல. மனிதனும் புறத்தேயுள்ள கருப்பொருளுஞ் சேரும் பொழுது உண்டாகும் எண்ணங்களின் சேர்க்கையை மனம் என்பர் அறிஞர். எண்ணங்கள் மனத்தின் ஊற்று. இது ஒரு சுற்று வட்டமாக அமைகிறது. மனதிலிருந்து எழும் எண்ணங்கள் சொல்லுருவாகவும் செயல் வடிவாகவும் வெளிப்படுகின்றன. மனிதனது பண்பட்ட மனதிலிருந்து தோன்றும் சொல்லும் செயலும் அவனது பண்பாட்டை இழக்கும் கருவிகளாகின்றன. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றார் வள்ளுவப் பெருந்தகை. உள்ளம் உயர்வுடையதாகக் கல்வி கருவியாகின்றது.

பண்பாடு என்பது ஒருவகை வாழ்க்கை முறை. அறிவு, நம்பிக்கை, அறவியல், சிறந்த பழக்க வழக்கங்கள் அமைவதற்கு பல அனுபவங்கள் ஆதாரமாக அமைய வேண்டும். பண்பாடு என்ற பொருளில் சங்க காலத்தில் பண்பு என்ற பதத்தை தமிழர் பயன்படுத்தினர். ''பண்பெனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்'' என்பது கலித்தொகை.

மக்கட்பண்பு எனப்படுவது உலக வழக்கறிந்து ஒழுகுதல் என்றும் தொடர்புடையாரின் இயல்பறிந்து அதற்கேற்பப் பழகுதல் என்றும் கூறுவர். ''உலகத்தோடொட்ட ஒழுகல்'' என்று வள்ளுவரும் ''ஒப்புரவொழுகு'' என்று ஔவையாரும் அறிவுறுத்தியுள்ளனர். எனவே மக்கட்பண்பு ஒழுகுநெறி, பண்பாடு என்பது சமுதாயத்தின் ஓர் அங்கமாயுள்ளவனின் வாழ்க்கை முறை.

பாரம்பரியம், சூழ்நிலை காரணமாக மக்களுடைய வாழ்க்கையில் சில பழக்கங்கள் அமைகின்றன. உலகிலுள்ள இனங்கள் அனைத்தும் தத்தமக்கெனச் சிறந்த சில பண்பாடுகளை வாழும் வழிமுறையாகக் கொண்டுள. தமிழினத்துக்கும் சிறப்பான இயல்புகள் சில இருக்கின்றன.

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு.

அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அதுவே அவனுடை வழியாகும்.

மானம்பெரிதென உயிர் விடுவான்
மற்றவர்க் குதவிடத் துயர்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
தருவது மெல்லெனப் பேசிடுவான்.

என நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை தமிழர் பண்பாட்டுச் சிறப்பைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

ஓர் இனத்தின் பண்பாட்டை அன்னாரது இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம், நடனம், பழக்க வழக்கங்கள், வழக்கிலுள்ள பழமொழிகள், இறுநூற்கருத்துகள் என்பன புலப்படுத்தி நிற்கும். உலகப் பொதுமறையாகிய திருக்குறள் தமிழரின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில் அக்கினி சாட்சியாகத் திருமணத்தை நிறைவேற்றி, ஆண், பெண் உறவைப் பிணைத்து தூய்மையான வாழ்க்கையை ஆரம்பித்து வைக்கும் முறை தமிழர் பண்பாடு. முதுகுரவரும், நண்பரும் உற்றார் அயலாரும் மணவிழாவில் கலந்து விருந்துண்டு மனமார வாழ்த்தித் தொடங்கும் வாழ்வே சிறப்புடையது என்பது தமிழர் நம்பிக்கை. இவ்வாழ்வில் ஆடவனுக்கு உயிர் கடமை -மனைவிக்கு உயிர் கணவன்.

''வினையே ஆடவர்க் குயிரே, வாணுதல
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'' - குறுந்தொகை

(காலம் மாறக் கருத்துகளும் மாறுவது விதி விலக்கு)

விருந்தோம்பல் தமிழர் பண்பாடு. கடவுள் ஒருவர். விதி வலிது, ஈதல், இசைபட வாழ்தல் என்பன சங்க இலக்கியங்களிற் காணப்படும் தமிழர் கொள்கை. தெய்வ நம்பிக்கை மிக்க தமிழர் கோயிலில்லாத ஊரில் குடியிருக்கவொண்ணாது என்ற கொள்கையில் விஞ்சி நிற்பவர். முதுமையை மதிப்பதும், பழமையைப் போற்றுவதும் தமிழர் வழக்கம். அன்னையை அன்பின் உருவகமாகவும் தந்தையை வீரத்தின் வடிவமாகவும் போற்றுவது அவர் தம் மரபு.

செய்ந்நன்றி மறவாமை, இன்னாசெய்யாமை, பழிக்கஞ்சுதல், கண்ணோட்டம் தமிழர் சால்பு. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பரந்த நோக்கமுடைய இனம் தமிழினம். பண்பாடு மிக்கவிடையே கடமையுணர்ச்சியுமுண்டு. 'செம்புலம் பெயல் நீர் போல'' என்ற தொடர் பொருள் பொதிந்தது. செப்பனிட்டுச் செழுமையாயுள்ள நிலம் செம்புலம். செம்புலத்திற் பெய்யும் நீர் நிலத்தைச் செழுமையாக்கி வளம்படுத்திப் பயனைத் தரும். கட்டாந்தரையில் விழும் நீர் விழலுக்கிறைத்தது. பண்பட்டமனதில் தோன்றும் உணர்வு எண்ணங்கள் நலனுடையனவாய் பயன் தந்து நிற்கும்.

காதலையும், வீரத்தையும் கூறும் சங்க இலக்கியங்களில் உடல் வருணனைகளையும் காமச்சேர்க்கைக் குறிப்புகளையும் காண முடியாது. காதலரின் உள்ளத்துணர்வே மிகுதி. தமிழன் பண்பாடு தனித்துவமானது. தெய்வ நம்பிக்கையும், மொழிச்சிறப்பும் பண்பாட்டின் கோலங்கள்.

**சமயமும் பண்பாடும்.**

மனிதனுடைய நம்பிக்கைகளும், ஐதீகங்களும், சடங்குகளும், சமயங்களாக உருவெடுக்கின்றன. சமயநெறி மனிதனை நீதிவழுவா நெறிமுறையில் இட்டு வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துகிறது. இதனால் ஒழுங்கும் கட்டுப்பாடுமான நல்லதோர் வாழ்க்கை முறை அமைகின்றது. சமயக் கோட்பாடுகள் பல. சில சமயவாதமாகவும் சில ஆன்மீகவாதமாகவும் செயற்படுகின்றன. பொதுவாகச் சமயத்தின் நோக்கம் மனதைப் பண்படுத்துவது. தமிழரது சமய ஆன்மீக தத்துவம் சைவ நெறி. இது என்று தோன்றியது, எவரால் தோற்றுவிக்கப்பட்டது எனறுணர முடியாத அளவுக்கு தமிழினத்துடன் தானும் வளர்ந்து, வாழ்க்கை அம்சங்களுடன் இரண்டறக்கலந்து நிலைத்திருக்கின்றது.

சமய தத்துவங்களின் அடிப்படையில் தோன்றிய நம்பிக்கைகள் ஆழ வேரூன்றி ஆல் போல் தழைத்துப் பரந்திருப்பதால் அவற்றைத்

தகர்த்தெறிய எடுத்த முயற்சிகள் அனைத்தும் ஈற்றில் விழலுக்கிறைத்த நீராயின. ஆனால் சமய நம்பிக்கைகளும் ஐதீகங்களும் தொடர்ந்து வளர்ந்து கொண்டே நிலைக்கின்றன. எனவே எந்த சக்தியாலும் அசைக்கவோ அழிக்கவோ முடியாத சக்தியாக தெய்வ நம்பிக்கையோடு கூடி சமயம் விளங்குகின்றது. உள்ளது என்றும் அழிவில்லாதது.

ஒரு இனத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கும், மேனிலைக்கும் ஆதாரமாய் இருப்பவை அவ்வினத்தின் மொழியும் அவர்கள் கைகொள்ளும் சமய நெறியுமேயாகும். மனிதனுடைய அறிவு மொழி வளர்ச்சிக்கும் நாகரிக மேம்பாட்டுக்கும், விஞ்ஞான விருத்திக்கும் உறுதுணையாக நிற்கின்றது. அறிவு உலகை உணர்த்தும். அறிவின் வழித் தோன்றிய ஆராய்ச்சி, எண்ணங்களை விரிவு படுத்தும். ஆனால் புலன்களை மனிதன் தான் பெற்ற அறிவின் துணை கொண்டு உணர்வைப் பெருக்கிப் பண்பாட்டை ஆக்க வழியில் ஊக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும். இன்றேல் கற்றதனாலாய பயன் இல்லையாம்.

"அரம் போலும் கூர்மையரேனும், மரம்போல்வர் மக்கட் பண் பில்லா தவர்" - திருக்குறள்.

எந்த ஒரு பாரம்பரியமும் பண்பாடும் அந்த இனம் கடைப்பிடிக்கும் சமயத்தின் அடிப்படையிலேயே நிலை கொண்டுள்ளன. சமய நோக்கிலேயே சமூக நோக்கம் அமைந்து காணப்படுவதை உலகமெங்கும் காணலாம். சமூகத்தின் பாரம்பரியமும் பண்பாட்டு வளர்ச்சியும் சமய அடிப்படையிலேயே தங்கியுள்ளனவென்பது வெளிப்படை.

மிக நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்ட ஈழத்தமிழினம் 17ம் நூற்றாண்டில் தன்னாதிக்கம் இழந்தது. அந்நிய ஆட்சியாளரால் கைக்கொள்ளப்பட்ட மதங்களும் மதங்களின் அடிப்படையிலான அவர்களது பண்பாடும் ஈழத் தமிழினத்தின் பண்பாட்டு மேலாதிக்கத்தை நசுக்க ஆரம்பித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்நிலை மேலும் மோசமாயிற்று. ஈழத்தமிழர் மூர்க்கமான பிற சமயப் பிரசாரத்தினைத் தாங்கி நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தமிழர் தமது மொழி, பாரம்பரியம், பண்பாடு என்பவற்றைப் பேண வேண்டியதும் தாக்கத்திலிருந்து மீட்க வேண்டியதுமான இக்கால கட்டத்திலே தான் ஆறுமுகம் அவர்கள் நல்லூர் கந்தப்பிள்ளைக்கும், சிவகாமியம்மைக்கும் இளைய மகனாகப் பிறந்தார்.


*எமது நோக்கில்..*

## தமிழ் ஓலைகள் – Tamil Pages

கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவரும் தமிழ் ஓலைகள் தகவல் ஏடு தமிழ் மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் தொடர்பு ஏடாக விளங்குகிறது.

அதில் வெளிவரும் பல்வகையான தகவல்களும் மிகப்பயனுடையது எனத் தமிழர் கருதுகின்றனர். அதனால் இவ்வேடு அவர்களின் இல்லங்களில் ஒழுங்காகப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது.

இத்தகவல் ஏடு ௨0,000 பிரதிகள் அச்சிடப்படுவது பூரிப்பான செய்தியாகும்.

இத்தகவல் ஏடு விரைவில் ஐரோப்பா வாழ் மக்களுக்கும் பயனுள்ளதாய் விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

மேலும் ௨000 ஆண்டில் இது பல புதிய அம்சங்களுடன் வெளிவரவிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

# Manogaran & Co
## Solicitors

Immigration & Nationality Matters
Criminal Matters
Civil Matters
Matrimonial Matters
Landlord & Tenant

Justices Licence
Traffic
Employment Matters
Welfare Benefit
Advice & Assistance at Police Station

**Tel : 0181 521 5757**
**Fax : 0181 521 8202**

**S.MANOGARAN** LL.B
24, Hoe Street, Walthamstow
London E17 4PH

# Nathan & Co

**Solicitors and**
**Administrators of Oaths**

*Mr V.Shanmuganathan*
*Mr S.Sivathasan*
*Mrs G.Jayathilake*

**106 Kingston Road,**
**Wimbledon**
**London SW19 1LX**

**Tel : 0181 542 1805**
**Fax : 0181 540 9773**

# SRIKANTH & CO

**Solicitors and
Administrators of Oaths**

Contact us for prompt and efficient service

Legal Aid Work Undertaken

**557 High Road
Wembley, Middlesex HA 2DW**

**Tel: 0181 795 0648
Fax: 0181 795 0649**

# BROKLEY RISE
# SUPER MARKET
# &
# OFF LICENCE

## Grocers & News Agents

94–96 Brockley Rise
London
SE 23 1 LN

Tel: 0181 690 4094

# BEST FOOD

## Off licence & News Agents

## Open 24 Hours

- இலங்கை இந்திய பொருட்கள்,
  - உடனுக்குடனான இலங்கை மரக்கறிகள்,
    - மீன், நண்டு, இறால்
      - இலங்கைப் பத்திரிகைகள்,
        - இந்திய வார மாத சஞ்சிகைகள்,
          - அத்துடன் மேல் நாட்டு குடிவகைகளுடன்
            - இலங்கை பியர், சாராய வகைகளுக்கும்

**நாடவேண்டிய ஒரே இடம்**

259 – 261 London Road
West Croydon
Surrey CR0 2RL

Tel: 0181 684 6269
Fax: 0181 665 5299

KUMARANS

# குமரன்ஸ்

**IMPORTS & EXPORTS**

உங்களுக்கு அன்றாடம்
தேவையான லீலா தயாரிப்பு பொருட்களை
மொத்த விற்பனை விலைக்கு தொகையாக
வாங்கி சிக்கனமடையுங்கள்

**142 Hoe Street**
**Walthomstow**
**London E17**
**Tel: 0181 521 4955**
**Fax : 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

**KUMARANS**

# Western Jewellers

**230 Upper Tooting Road**
**London SW 17 7EW**
**Tel : 0181 767 3445**

http://www.luxmi.com/western



Opening hours
Mon - Sat 10 a.m. - 6.30 p.m. Sun 11 a.m.- 5.30 p.m.

வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்

**வெஸ்டன் ஜுவல்லர்ஸ்**


Printed by: MEARG PRINT LTD. 020 8810 5577